விலை ரூ.10.00

# இந்து கலாசாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

## சமூக மறுமலர்ச்சியில் சைவம்



பக்திப் பெரு விழாவில்

[illegible]

# திருக்கோணேசர்நாதரின் திருக்குடமுழுக்கு

— தில்லை —

தாயினும் நல்ல தலைவர் உறையும் திருத்தலம் திருக்கோணேஸ்வரம். சிவ பூமியென்று இலங்கையை கூறுவதென்றால் அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது திருக்கோணேஸ்வரத்தின் மகிமையும், சிறப்புமேயாகும். இயற்கை எழில் சூழ்ந்த திருத்தலமிது. குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை என்று ஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற இப்புண்ணிய பூமி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு சிவத்தலம். பாவநாசத் தீர்த்தத்தில் நனைந்தாலே போதும் எம்மைச் சூழ்ந்துள்ள பாவங்கள் அனைத்தும் பறந்தோடிவிடும். கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை, வரலாறு அதன் தாற்பரியம், உறையும் இறைவனின் பெருமைகள் யாவும் அளவிடற்கரியன.

கடல் கோள்களினாலும், அன்னியரின் படையெடுப்புக்களினாலும்கூட திருக்கோணேச நாதரின் பெருமைதனையும், சிறப்புத்தனையும் அழித்துவிட முடியவில்லையென்றால் அவர்தன் அருள் சுரப்பு அளவிடற்கரியது. குடிதனைப் பெருக்கி நெருக்கமாய் தோன்றிய இடம், திருக்கோணமலை பல நாடுகளிலிருந்தும் இவரின் திருவருளைப் பெற்றிட பல்லாயிரக்கணக்கானோர் வருகைதந்த குறிப்புக்களை நோக்கும்போது காலத்தால் முற்பட்ட ஆலயமிது என்பது புலனாகின்றது. வாலாறுகள் யாவும் திருக்கோணேசர் ஆலயத்தின் சிறப்பு இலங்கைத் திருநாட்டிற்கு மெருகூட்டி நின்றது என்பதையே புலப்படுத்துகின்றன.

பெருமையும் திருவருள் சிறப்பும் கொண்ட இவ்வாலயம் மூன்றாண்டுகளாக பூட்டப்பட்டுக் கிடந்தது அடியார்கள் சென்று வழிபடுவதற்கு கோட்டைக்குள் போகமுடியாத நிலையிருந்தது திருக்கோணமலை மக்கள் கோணேசநாதரைக் காணத் துடித்தனர். நகரத்துள் நின்றே கரம்கூப்பி வணங்கி வந்தனர். மக்கள் குரல் மகேசனுக்குக் கேட்டதோ என்னவோ ஆலயத்தை திறக்கும் நாளும் நெருங்கியது.

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள் திருக்கோணமலை கோணேசர்நாதர் ஆலயம் பூட்டப்பட்டுக்கிடப்பது இலங்கைத் திருநாட்டிற்கு நல்லதல்ல என்பதை புணர்ந்து மேதகு ஜனாதிபதியவர்களிடம் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து வழிபாட்டிற்காக திறந்துவிடுவதுடன் நாளாந்தப் பூசைகளும் ஒழுங்காக நடைபெற வழிசெய்யவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இதைச் செவிமடுத்த ஜனாதிபதி அவர்கள் உடனடியாக புனருத்தாரண வேலைகளுக்காக ரூபா ஐந்து லட்சம் வழங்கி துரித கெதியில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படியும் கூறிவைத்தார். வடகிழக்கு மாகாண ஆளுநரின் உதவியுடன் கடந்த 8-11-92 இல் திருக்கோணேசநாதருக்கு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து ஆலய பரிபாலன சபை, ஆலய புனருத்தாரண சபை இந்துகலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மூன்றும் இணைந்து மகா கும்பாபிஷேகம் செய்வதற்காக 11-02-93ஐ கும்பாபிஷேக நாளாகக் குறித்து செயற்படத் தொடங்கின. குறுகிய காலத்திற்குள் இறையருளால் அத்தனை திருப்பணி வேலைகளும் நடந்தேறி திருகுடமுழுக்கு காணும் நாளும் குறிப்பிட்ட திகதியில் நடந்தேறியது இறைவன் அருள் சுரப்பு என்றே கூறவேண்டும், 1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை குப்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின. பல குப்பாபிஷேகங்களை நடாத்தி கைராசிக்காரர் என்ற பெயர்பெற்றவரும், கடந்த கோணேசநாதர் கும்பாபிஷேகத்தை நடாத்திவைத்தவருமான நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் இருபத்திரெண்டு சிவாசாரியர்கள் புடைசூழ்ந்து யாக குண்டங்களில் வேத ஒலி முழங்கிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நான்கு நாட்கள் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று ஐந்தாம்நாள் கோணேசநாதர் மாதுமையம்பாள் மற்றும் சுற்றுப்புற தெய்வங்கள், அவரவர் இடங்களில் வைக்கப்பட்டு மருந்து சாத்தப்பட்டவுடன் 10ம் திகதி விடியற்புறம் 6 மணியில் இருந்து எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் நடைபெற்றது. திருகோணமலை நகரமே திரண்டுவந்து எண்ணெய் வைத்து இறைவனையும் இறைவியையும் எண்ணெய்யில் மூழ்கவைத்து மனம் மகிழ்ந்து நின்ற காட்சியைக் கண்டபோது கடந்த மூன்றாண்டுகளாக எவ்வளவு தூரம் மக்கள் இறைவனைக்காண ஆவல்கொண்டிருந்தார்கள் என்பதை உணர்த்தி நின்றது. திருக்கோணமலை, கோட்டைவாசல் தொடங்கிகோணேசநாதர் மூலஸ்தானம் வரை 10ம் திகதி காலையிலிருந்து மாலை 6 மணி வரை மக்கள் வரிசையில் நின்றிருந்து எண்ணெய் காப்பு சாத்தி மகிழ்ந்தனர். இறுதி நபர் எண்ணெய்வைத்து முடியும்வரை இந்த எண்ணெய்க் காப்பு வைபவம் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

02 SEP 2003
நூலக


# இந்து கலாசாரம்

மலர் : 3 ● தை—மாசி வெளியீடு ● இதழ் : 10


## பக்திப் பேரெழுச்சி

கடந்த பெப்ரவரி மாதம் 21ம் திகதி இலங்கை வாழ் இந்துக்களின் வரலாற்றில் ஒரு புத்தெழுச்சியை ஏற்படுத்திய நாளாக அமைந்தது.

ஆம்! இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த பக்திப் பெருவிழா நிகழ்ச்சிகளையே குறிப்பிடுகின்றோம்.

அன்று காலை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் இந்துசமயக் கருத்தரங்கு நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்; அறிஞர்களின் கருத்துரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வந்திருந்த பிரதிநிதிகள் தமது எண்ணங்களை முன்வைத்தனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பதிலுரை நிகழ்த்தினார்.

கருத்தரங்கினை அடுத்து இந்து சமயத்திணைக்களத்தின் 'இந்துக்கலைக் களஞ்சியத்தின்' தொகுதி இரண்டு வெளியிடப்பட்டது. பதிப்பாசிரியர் குழுத் தலைவர் பேராசிரியர் சி பத்மநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணாநந்தா அவர்கள்வாழ்த்துரை வழங்கினார்.

மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் மண்டபம் வழிந்த கூட்டம். அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், விருது வழங்கும் வைபவத்திற்கு வந்திருந்தார்.

கலாசூரி, வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவியர் அளித்த 'குமார சம்பவம்' நாட்டிய நாடகம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. மேடை அலங்காரமும், ஒலி, ஒளி அமைப்புகளும் பிரமிப்பை ஏற்படுத்தின.

அதனை அடுத்து, வாரியார் சுவாமிகளை வணங்கி, வாழ்த்திய இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் உரை நிகழ்த்தும்போது:-

**"இன்றைய நாள் இந்துசமய எழுச்சியின் வெளிப்பாட்டை உணர்த்தும் நாள்"**

எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த எழுபத்தேழு ஆன்மீகப் பெரியோர்கள், அருளாளர்கள் வாரியார் சுவாமிகளால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அமைச்சர் தேவராஜ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அந்த எழுபத்தேழு பேரும் மேடையில் அமர்ந்திருந்த காட்சி மகிழ்வுமிக்கதாக இருந்தது ஆன்மீகப் பணியும், அருட்பணியும் ஆற்றுவோர் அரச கௌரவம் பெற்றமை காண பெருமிதமாக இருந்தது.

அதனை அடுத்து வாரியார் சுவாமிகள் அருளுரை நிகழ்த்தினார்:-

**"தேவராஜ் பணியைக் காண தேவருலகமே வந்ததுபோல்"** இருக்கின்றது எனக் கூறி அமைச்சின் பணிகளுக்கு பூரண ஆசிகளை வழங்கி வாழ்த்தினார்.

மீட்டுப்பார்க்கிறோம்!

அன்றைய பொழுது இந்துசமய மக்களுக்கு ஒரு பெருமைதரும் நாளாக அமைந்தது. அரச கௌரவம் பெற்ற அறப்பணியாளர்கள் இனியும் ஆன்மீகத் தூதுவர்களாகப் பணிபுரிவார்கள், முழுமனதோடு சமயப் பணி ஆற்றுவார்கள். ஆலயப் பணியும், சமூகப் பணியும் ஒன்றிணைந்து மக்கள் நலம்பெற வழி சமைப்பார்கள். இன்னும் புதியவர்கள் பணிசெய்ய முன் வருவார்கள்.

இந்த புதிய திருப்பத்தை ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்திவைத்த இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களை மனமாரப் பாராட்டுகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

விழாவைச் சிறப்புற நடாத்திய அமைச்சின் உயரதிகாரிகள், அலுவலகர்கள் அனைவரையும் போற்றுகின்றோம்.

நல்ல எண்ணம், நல்ல செயல் உரிய விளைவை அளிக்கும் என்பதற்கு அமைச்சர் தேவராஜ் அவர்கள் ஆற்றிவரும் பணிகளே சான்றாகின்றன.

அமைச்சர் அவர்களுக்கு பூரண ஆயுளும், இறை அருளும், இன்னும் பல நல்ல சாதனைகளை ஆற்றும் சந்தர்ப்பமும் கிடைக்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

---

உன் ஆசைக்கு பாத்திரமானவரிடம் உன் இஷ்ட தெய்வத்தை காண்பாயாகில், சுலபமாக மனம் பகவானை நாடிச் செல்வதை உணர்வாய்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

# சமயம் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடையது

— சுவாமி ஆத்மகணானந்தாஜி —



சமயம் என்றால் ஆலயங்களுக்கு சென்று இறைவனை வழிபட்டு மறந்துவிடுவது மாத்திரம் அல்ல இந்தப் பரந்த உலகத்திலிருந்து, சமூகத்திலிருந்து தனித்து வாழ்வதும் அல்ல. வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததுதான் சமயம். வாழ்க்கையின் உயர்ந்த ஸ்தானத்திற்கு மனிதனை இட்டுச்செல்லக் கூடிய அதியுயர் பண்புகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் நல்ல ஒழுக்க நெறிகளையும் போதித்து வழி காட்டுவதுதான் சமயம். சமயம் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடையது. மக்களுக்கு செய்யும் சேவையே ஆண்டவனுக்கு செய்யும மிகப் பெரிய வழிபாடு.

இவ்வாறு கொழும்பு இந்து இளைஞர் மன்ற போஷகரும், இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளைத் தலைவருமான சுவாமி ஆத்மகணானந்தா அவர்கள், அண்மையில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கொழும்பு இந்து இளைஞர் மன்றமும், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா சபையும் இணைந்து ஏற்பாடு செய்த இந்து சமய எழுச்சி விழாவில் உரையாற்றினார்.

சுவாமி உரையாற்றுகையில் தொடர்ந்து கூறியதாவது;

இலங்கையில் பிரசித்திபெற்ற ஆலயங்களுள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் ஒன்று. இவ்வாலய தர்மகர்த்தா சபையினர் சமய வழிபாட்டுடன் நின்றுவிடாமல் சமுதாய மறுமலர்ச்சிக்கு முக்கிய கவனம் செலுத்துவதையிட்டு நாம் மனம் மகிழ்கின்றோம்.

ஒதுக்கப்பட்டவர்களை தீண்டத்தகாதவர்கள் எனக் கூறுகின்றோம், ஒதுக்குகின்றோம். மனிதனை தெய்வீகத் தன்மையுடன் நோக்குகின்றது எமது சமயம். ஆனால் இந்து சமயத்தை பின்பற்றும் பல மனிதர்கள் சாதி என்ற போர்வையில், தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கிவிடுகின்றார்கள். மனிதனைகொடுமைப்படுத்துகின்றார்கள். மதத்தை மதக் கோட்பாடுகளை உண்மையாக நேசிக்கும் எந்த மனிதனாலாவது இந்தவகையான கீழ்த்தரமான செயல்களை ஜீரணிக்க முடியாது. இது மிகவும் வெட்கக் கேடானதும் வேதனைக்குரியதுமாகும்.

அன்புள்ளம் இல்லாதவர்கள் எப்படி ஆன்மீகவாதியாகிவிட முடியும். ஆன்மா என்பது அனைவர்க்கும் பொதுவானது உங்கள் ஆன்மாவில் உயர்ந்த பண்புகளை வெளிப்படுத்துங்கள். ஒரு மனிதன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரி, அவன் என்ன நிலைமையில் இருந்தாலும் சரி, அவனுக்கு சமயம் பயன்படவேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் சமயம் பயன்படவேண்டும். அப்படி சமயம் பயன்படவில்லையென்றால் அந்த சமயத்தால் எதுவித பயனும் இல்லை சமயம் மனிதனுக்கு கை கொடுக்கவேண்டும்.

இந்து சமயத்தில் அனைவருக்கும் இடமுண்டு. இந்து சமயத்தில் அனைவருமே சமத்துவமாக கணிக்கப்படுவர். ரிஷிகள் வாழ்ந்த இந்த நாட்டில் மக்கள் இன்று ஏன் அவல நிலைக்குள்ளாகி இருக்கின்றனர்?


இந்த உலகத்தில் காணப்படும் வேறுபாடுகள் எல்லாம் அளவுகளிலேதான் காணப்படுகின்றன. சாதியிலோ அல்லது இனத்திலோ இல்லை. ஒவ்வொரு மனிதனும் ரிஷி பரம்பரையில் தோன்றியவர்களே. எந்தவகையான நெருக்கடியான கால கட்டத்திலும் நாம் சமயத்தை இழப்பதில்லை. புலன்களை அடக்குபவனே வீரன்.

இன்று மக்கள் மத்தியில் தன்னம்பிக்கை இல்லை. உயர்ந்த சிந்தனை இல்லை. வஞ்சகம், சூது, பொறாமை, கோபம், கபட எண்ணம் போன்ற தீய குணங்களே இன்று மக்களை ஆட்டிப்படைக்கின்றன இதனால் இன்று மனிதர்கள் மிருகங்களைப்போன்று வாழ முற்படுகின்றனர். ஒருவருக்கொருவர் அன்பு காட்டவேண்டும், இரக்க சிந்தனையுடையவர்களாக வாழவேண்டும் அன்பேதான் சிவம்.

# காந்திய வழியில் நின்ற

## காந்தி மாஸ்டர்

— ஆத்மஜோதி நா. முத்தையா



காந்தி மாஸ்ரர் என்றால் பொ. கந்தையா மாஸ்ரரையே குறிக்கும் என்பது, திருக்கோணமலையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் அன்று, உலகிலுள்ள தமிழர்கள எல்லாரும் அறிந்த ஒன்றாகும்.

நாவலர் என்றால் ஆறுமுகநாவலரை குறிப்பது போன்று காந்தி மாஸ்ரர், கந்தையா அவர்களையே குறிக்கும். இப்பெயரை இரண்டாவது ஒருவர் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

இரண்டு கதர் வேட்டிகளை எடுத்து ஒன்றை உடுத்திக்கொண்டு மற்றதால் உடம்பை மறைத்துக் கொள்வதே அவரது உடை.

அவர் மிதித்த இடத்துப் புல்லுஞ் சாகாது என்பதற்கு இலக்கியமே அவரது தோற்றம்.

உடம்பில் சட்டையைச் சட்டை செய்யாத மனிதர் என்றால் அவர் ஒருவரைத்தான் கூறலாம்.

அவர் விடுகிற மூச்சும் காந்தியம் என்றே உயிர்க்கும். எதற்கும் நல்லது கூறும் வழக்கம் அவரிடம் உண்டு சீனாவில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் எதற்கும் நல்லதும் என்று கூறுவதே வழக்கம். அவரது மகன் ஒருமுறை ஒரு மரத்தில் ஏறி விழுந்து காலை முறித்துக்கொண்டான். அவரது மனைவி அழுதுகொண்டு ஓடிவந்து மகனது பரிதாப நிலையைக் கூறினாராம் நல்லதும் என்றாராம் அப்பெரியவர். மனைவிக்குக் கோபம் தலைக்குமேல் வந்து விட்டதாம்.

கணவனைத் திட்டு திட்டென்று திட்டினாராம். அவர் எதுவுமே பேசவில்லையாம் மகனுடைய கால் எடுக்கப்பட்டுவிட்டது நொண்டியாகவே மகன் காணப்பட்டான்.

30 வயதுக்குட்பட்டவர்கள் எல்லோரும் கட்டாய இராணுவ சேவையில் சேரவேண்டும் என்று அறிவித்தல் வந்தது.

இப்பொழுது பெரியவர் கூறினார். அன்று மகனுடைய கால் முறிந்தபோது நல்லது என்றேன். அந்த நேரத்தில் திட்டினாய், மகன் நொண்டியானாலும் எங்கள் முன்னே உயிரோடு இருக்கிறானே யுத்தத்திற்குச் சென்றிருந்தால் அவனுக்கு என்னாகும் என்பதை யாரறிவார்?

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

---

## சமயம் சமூகத்தோடு . . .

கோபப்படும் எந்த ஒரு நல்ல மனிதனாலாவது எந்த ஒரு நல்ல செயலையும் செய்ய முடிவதில்லை. கோபத்தை அடக்கி ஆளும் ஒரு மனிதனால் சிறப்பான நல்ல பணிகளை செய்ய முடிகின்றது. வேதாநதம் கூறுவது என்னவெனில்; ''ஒவ்வொரு மனிதனும் தன்னில் முழு நம்பிக்கை வைத்து செயல்படவேண்டும்'' என்று வாழ்க்கை உயர்ந்த இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு அமையவேண்டும்.

''மக்களை நேசியுங்கள்'' இதுவே இந்து சமுதாயம் படிக்கவேண்டிய முதல் பாடமும் முக்கியமான பாடமுமாகும்.

எமது சமயம் மக்களை வழிபடும் சமயமாக மாற வேண்டும் இந்து ஆலயங்கள், ஆச்சிரமங்கள் ஒவ்வொன்றும் மனிதனுக்கு தொண்டுசெய்யவேண்டும்.

மாணவர்கள் நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்ளவேண்டும். நல்ல நூல்களை வாசிக்கவேண்டும். ஒரு மனிதனை நல்லவனாகவோ அல்லது தியவனாகவோ உருவாக்குவது அவனது பழக்க வழக்கங்களே. மன ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும். அப்படியானால் ஒருவன் சமுதாயத்தில் நல்ல பிரஜையாக உருவாக முடியும்.

— நா. ஹரிதாஸ்

## காந்தி வழியில் நின்ற . . .

(முன் பக்கத் தொடர்ச்சி)

இதே போன்ற செயலையுடையவர்தான் காந்தி மாஸ்ரர், பிறர் துன்பங் கண்டு சகிக்காதவர் பிறன் ஒருவனுடைய துன்பங் கண்டு எவனுடைய மனம் இரங்குகின்றதோ அவன்தான் உண்மையான இந்து என்று காந்தி கூறியிருக்கிறார். இதற்கு இலக்கிய புருஷனாக விளங்குபவர்தான் காந்தி மாஸ்ரர்.

பிறருக்குப் பணமுடை ஏற்படும்போது, தானே தன்னுடைய நகையை அடைவு வைத்து தன் பணத்தில் வட்டியும் கொடுத்து உதவி செய்வார். ஆனால் உதவி பெற்றவர்கள் அவருடைய இளகிய மனத்தை அவரது பெலவீனம் என்று கருதி அவரை ஏமாற்றியவர்களும் உண்டு.

தமிழிலே எல்லாம் நடைபெற வேண்டும் என்று மேடைகளிலே பேசுவார்கள். ஆனால் நடைமுறை வேறாக இருக்கும். இவரது திருமணம் ஒரு நிறை குடத்தோடும் ஒரு குத்து விளக்கோடும் மாத்திரம் தமிழ் முறைப்படி திருமுறைக் கலியாணமாக நடைபெற்றது. அதனை நடத்தி வைக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. அத்திருமணத்திலே குன்றக்குடி அடிகளார், பண்டிதர் கா. பொ. இரத்தினம் போன்றவர்கள் சமூகம் அளித்து ஆசியுரை வழங்கினார்கள்.

அவருடைய இச்சிறந்த வாழ்க்கைக்கு மூலகாரணர் இவருடைய அன்பு மனைவியார் ஆவர். இவர் நினைப்பதை மனைவியார் செய்து முடிப்பார். பிறருக்குதவி செய்து கெட்டவர்களில் முதன்மையானவர் காந்தி மாஸ்ரர்.

''கெடுவாக வையாதுலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு''

என்ற வள்ளுவன் குறளுக்கு உதாரண புருஷர் காந்தி மாஸ்ரரேதான்.

நடுநிலைமை தவறாமல் எப்போதும் நடந்து கொள்ளுகிறவனுடைய தரித்திரத்தை ஒரு குற்றமாக உலகத்தினர் கருத மாட்டார்கள்.

நன்றிக் கட்டங்கியான் என்பதற்கு நேர்மை என்ற நல்ல குணத்திலேயே எப்போதும் தங்கி இருப்பவன் என்று பொருள் அதனால் எப்போது நேர்மை தவறாமல் வாழ்க்கை நடத்துகிறவன் ஏழையாகவே இருக்க நேர்ந்தாலும் உலகம் அவமதித்து விடாது. மேலும் அவனுடைய ஏழ்மையினால் அவனுக்குத் துன்பம் வந்து விடாமலும் உலகத்தார் கவனிப்பார்கள் என்பதும் தோன்றுகிறது.

காந்தி மாஸ்ரர் ஒரு சத்தியவந்தன், மறந்தும் பொய்பேசாதவர்

''உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாமுளன்''

என்ற வள்ளுவன் வாக்கிற்கு உருவங் கொடுத்தால் அது காந்தி மாஸ்ரராகும். மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்துகொள்ளுகிற ஒருவன் உலகிலுள்ள மற்றெல்லாராலும் மதிக்கப்படுவான்.

மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்து கொள்ளக் கூடியவன் வாயால் ஒரு பொய்யே சொன்னாலும் பிறருக்குப் பகைதீர்ந்து நல்லமை உண்டாக்கும் நோக்கத்தோடுதான் சொல்லுவான். பலருக்கும் தீமை உண்டாக்கக் கூடிய எதையும் சொல்ல மாட்டான். ஆதலால் அவன் என்ன சொன்னாலும் அது சத்தியம் என்று மற்றவர்கள் பாராட்டி அவன் சொன்னதை ஒத்துக் கொள்வார்கள். உலகத்தார் எல்லாம் என்பது அவனை அறிந்த மற்ற எல்லாரும் என்பதுதான்.

காந்தி மாஸ்ரருடைய வாழ்க்கையே ஒரு புராணம்தான். அதைப்பற்றி எழுத முனைந்தால் பல பக்கங்கள் நீளும். விரிவஞ்சி இத்துடன் நிறைவு செய்கிறோம்.

நன்றி : வைரவிழா மலர்

---

# இடைக்கப்பெற்றோம்

## திருவெம்பாவை

பிரம்மஸ்ரீ சாஸ்தாதாஸன் குருக்கள் அவர்கள் அனுப்பிவைத்திருந்த திருவெம்பாவை, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய பத்துப் பாட்டுகளும், விளக்கமும், பாடல்களில் பொதிந்து கிடக்கும் தத்துவமும் செறிந்தவொரு கைநூல். மாணவ மாணவமணிகளின் கைகளில் இத்தகைய சிறு நூல்கள் இருக்குமாயின் அவை பெரும் பயன்தரும். இவற்றை தாம் பெற்றுப் பலருக்கும் அனுப்பி பயன் செய் பிரம்மஸ்ரீ சாஸ்தாஸன் அவர்களின் பணி பெரியது.

---

## 'ஓம்' எனும் பிரணவத்தின் மகத்துவம்

கண்டி தலதா வீதியைச் சேர்ந்த ஆசிரியை பழ. சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள ஒரு சிறு பிரசுரம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இப்பிரசுரத்தில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின் தத்துவங்கள் நுட்பமாக விளக்கப்பட்டுள்ளன, பல்வேறு உபநிடதங்களில் இருந்தும் 'ஓங்காரத்திற்கு' தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் தனிப்பட்டோரும், மன்றங்கள், சமய அமைப்புகளும் இத்தகைய சிறுசிறு விளக்கப் பிரசுரங்களை வெளிட்டால் அவை பல்கிப் பெருகி நல்ல பயன் விளையும்.

# சிவராத்திரியில் லிங்க பூஜை தேடித் தரும் பயன் பல கோடி

— செல்வி என். சத்தியகாந்தி —

இறைவன் லிங்க வடிவில் இருப்பது உருவும், அருவும் ஆனவன் என்பதை உணர்த்துகின்றது. லிங்கத்தின் தோற்றம் முதலும் முடிவும் இல்லாத இறைவனைக் குறிக்கின்றது. லிங்கம் என்ற சொல்லுக்கு குறி என்றுதான் பொருள். சிவராத்திரியன்று ஜோதி லிங்கமாக சிவன் தோன்றுகின்றார். ஒவ்வொரு மாதத்திலும் கிருஸ்ணபட்ச சதுர்த்தசி இரவில் அனுஷ்டிக்கும் சிவ வழிபாட்டு விரதம் மாத சிவராத்திரியாகும். மகா சிவராத்திரி வரலாறாகப் பல இருப்பினும் கந்தபுராண அடிமுடி தேடிய வரலாறே மிகத் தெளிவாக இவ் அதிமுக்கிய வழிபாட்டுத் தினத்தை இயம்புகிறது. தக்கன் பிரமாவின் மக்களில் ஒருவன். இவன் சூரபன்மனைப் போன்று சிவபெருமானின் அருளால் உலகங்கள் எல்லாவற்றையும் ஆளுங் காலத்தில் பெருங் கொடுமைகளைச் செய்தான். இது மாத்திரமல்லாமல் தன் மகளாகிய உமையம்மையாரை இகழ்ந்தான்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவபெருமானுக்கே கொடுக்கவேண்டிய பாகத்தைக் கொடாது தேவர்களையும் ஏமாற்றி கொடிய யாகத்தைச் செய்தான். கருணைக்கடலாகிய சிவபெருமான் சூரபன்பனுக்கும் அனுக்கிரகஞ் செய்தார். தக்கனுக்கும் அனுக்கிரகஞ் செய்தார். துஷ்ட நிற்கிரக சிஸ்ட பரிபாலன மூர்த்தியாகிய பெருமான் துஷ்டரைத் தண்டிக்க வேண்டி சூரபன்மனை முருகக் கடவுளால் தண்டித்தது போன்று தக்கனையும், வீரபத்திரக் கடவுளால் தண்டித்தார். தக்கன்செய்த யாகத்தை அழித்து தக்கனுக்கு ஆட்டுக் கடா முகமும் உண்டாகும்படி செய்தருளினார். இஃது கந்த புராணத்தில் யாக சங்காரப் படலத்துள் செவ்வனே சொல்லப்பட்டுள்ளது. இச்சங்காரத்தின் பின் தக்கனுடைய தந்தை பிரம்மா தக்கனுக்குச் சொல்லியவற்றை அழகாகக் கந்த புராணத்தில் பார்க்கிறோம்.

உணர்வு பெற்றவனாகிய தக்கன் இப்போது தந்தையிடம் சிவ நிந்தனையின் பேற்றையும், சிவ வந்தனையின் பேற்றையும் கேட்டுத் தெளிகிறான். இப்போதுதான் தக்கன் எப்படியாகத் தானும் திருமாலும் அகந்தையால் பெற்ற பெரும் அனுபவத்தைச் சொல்கிறார் சிவபரம் பொருள் சோதிப் பிழம்பாகத் தோன்றி பிரம்மா விஷ்ணுவை ஈடேந்துகின்றார். இச் சோதி தோற்றிய நாளே சிவராத்திரியாகும். சிவபெருமான் சோதியாய்த்தோற்ற அடியையும், முடியையும் தேடி பிரம்மா, விஷ்ணு செல்கிறார்கள். பிரம்மா அன்னப்பட்சி வடிவெடுத்து முடியைத் தேடினார் காணவில்லை. அகந்தை நீங்கப்பெற்று சோதியினிடத்தே சரணடைகிறார்கள். அந்நேரத்தில் பெருமான் அவர்க்கு வேண்டிய அருள் புரிந்து சோதியானது பெரிய லிங்க வடிவாயிற்று. இத்திவ்விய காலமே சிவராத்திரிக் காலமாகும். இக்காலத்தில் வேண்டிய விரதப்படி சிவ வழிபாடு செய்வோர் வேண்டிய சித்திகளைப் பெறுவர். இந்த விரதத்தை அனுஷ்டித்து சூரியன், சந்திரன், யமன், மன்மதன் ஆகியோரும் அருள்பெற்றுள்ளனர் எனவும் எமது புராணங்கள் கூறுகின்றன. நாள் முழுவதும் விரதம் இருந்து இறைவனைத் தியானித்து காலையில் நீராடி விரதத்தினை முடித்துக்கொள்வதால் பல கோடி லிங்கங்களை வணங்கி பெறும் பயனையும், அருளையும் ஒரே நாளில் பெறமுடியும் என்பது பக்தர்கள் கணிப்பு. சிவராத்திரி தினத்தில் நான்கு சாமத்திலும் கண் விழித்து எமது மனதைக் கட்டுப்படுத்தி, ஒரு நிலைப்படுத்தி சிவனோடு ஐக்கியப்படுத்தி தியானத்திலும் பூஜை வழிபாடுகளிலும் ஈடுபடவேண்டும். சிவராத்திரியன்று சிவலிங்கத்தைப் பூஜிப்பதால் ஏற்படும் பயன் கோடானுகோடியாகும். சிவராத்திரி என்று அறியாமலே ஆண்டவனைத் துதித்து ஞானம் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

புலியின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்ள வில்வம் மரத்தில் ஏறிய வேடன் ஒருவன், தூக்கம் வராமல் இருக்க நான்கு சாமங்களிலும் வில்வம் இலைகளைக் கீழ போட்டான். அவன் அவ்விதம் வீசியது ஒரு லிங்கத்தின்மீது விழுந்தது. தூக்கம் வராமல் இருப்பதற்காக அவ்விதம் வில்வம் இலை போட்டவனும் ஆண்டவன் கிருபை பெற்றான் என்பது வரலாறு. திருப்பாற் கடலை கடையும்போது உண்டான விஷத்தை நன்றி செலுத்தும் முகமாகவே பண்டுதொட்டு சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக மற்றொரு வரலாற்றில் கூறப்படுகிறது. மகா சிவராத்திரியான புண்ணிய தினத்தில் இரவில் கண் விழித்து சிவனை நினைந்து உருகி அவனிடம் அடங்கி ஐக்கியப்படுவதைத் தவிர வேறு ஆனந்தமே இல்லை. சிவனின் அருளைப்பெற இதுவே சிறந்த வழியுமாகும். எனவே இச்சிவராத்திரி தினத்திலே நான்கு சாமமும் நித்திரையொழிக்க இயலாவிடினும் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரையொழித்து சிவதரிசனஞ் செய்து இஷ்ட சித்திகள் பெறுவோமாக.

# கலைப்பாதை ஒருவழிப்பயணமாக அமைவது கூடாது........... அது ஆரோக்கியமானது அல்ல...........

— வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் J. P. —



இந்தியக் கலைஞர்களை இலங்கை வரவேற்பது பாராட்டத்தக்க ஒன்றுதான் அதேபோன்று இந்திய அரங்குகளிலும் இலங்கைக் கலைஞர்கள் இடம்பெற வேண்டும். இந்திய-இலங்கைக் கலைஞர்களின் கூட்டமைப்பை உருவாக்கி கலை பரிவர்த்தனை ஏற்படவேண்டும். இல்லையென்றால் ஒருபக்க வளர்ச்சியும் ஒருபக்கத் தேய்வுமாக ஏற்படும். இது கலைஞர்களிடையே தாக்கத்தை ஏற் படுத்தும். இருவழிப் போக்குவரத்திற்கான 'கலைப்பாலம்' அமைக்க இந்து கலாச்சார அமைச்சு மேலும் மேலும் ஆவன செய்யவேண்டும்.

---

இசைக்கலை, நடனக் கலை போன்று பேச்சும் ஒரு அற்புதமான கலைதான். பல புத்தகங்களில் படித்து அறிவதை ஒரு சிறந்த பேச்சை கேட்பதனால் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் நினைப்பதுபோல் பேசுவது என்பது எளிதல்ல, அவையஞ்சாமை, அவை அறிதல், பரந்துபட்ட நூலறிவு தக்க மேற்கோள்களின் மூலம் விளக்கும் ஆற்றல் பாடல்களை மனனம் செய்தல், ஞாபக சக்தி, நிரல்படக் கூறல் உளம் கொளக் கூறல் இவ்வளவும் ஒரு சிறந்த பேச்சின் உறுப்புக்கள். எத்துணையோ பேர் நிரம்பப் படித்திருப்பார்கள். எடுத்துச்சொல்ல வகையறியாது தவிப்பார்கள்.

''இணரூழ்த்து நாறாமலரனையர் கற்ற
துணர விரித்துரையாதார்''

இராமபிரானின் சுரசரத்திற்குச் ''சொல்கலாக்கும் வேகம்'' என்று உவமை கூறுவார் கம்பர்.

''சொல்விற்பனமும், அவதானமும் கல்விசொல்ல
வல்ல நல் வித்தையும் தந்து அடிமைகொள்வாய்''

என்று கலைமகளை வேண்டுவார் குமர குருபரர்.

---

● கற்கோவில் காலத்தால் அழிந்துபடும். ஆனால் கலைஞர்கள் கட்டிய 'சொற்கோயில்'களை காலதேவனாலும் அழிக்க முடியாது.

---

ஔவைக்கு-அதிகமான்; கம்பனுக்கு-சடையன்; ஒட்டக்கூத்தனுக்குக்-குலோத்துங்கன்; கபிலனுக்குப் பாரி என்று வள்ளல்களும் மன்னர்களும் வளர்த்த கலை இது. எழுத்தும், பேச்சும் கலையின் இரு கண்கள். இன்று இக்கலைகள் அப்படிப் போற்றப்படுவதில்லை. நடனமா-இசையா-நாடகமா இவைகளைக் காணப் பெரும் பொருள் கொடுக்க முன்வருகின்றனர். ஆனால் சொற்பொழிவாற்ற ஒருவர் சென்றால் அப்படிப் பொருள் கொடுத்துப் போற்ற முன்வருவது இல்லை. பெரும்பாலான இடங்களில் வெறும் தேங்காய் மூடிக் கச்சேரிதான்...இந்நிலையில் இத்துறைகளில் புலமைபெற யார் முன்வருவார்கள்?

என்று மிகப்பெரிய வினாக் குறியை நம்முன் வைத்தார் அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே. பி. அவர்கள்.

---

● ''இந்து கலாசாரம்'' இலங்கைக் கலைஞர்களை கௌரவப்படுத்தி ஊக்குவிக்கும் வரிசையில் இம்முறை அருள்மொழி அரசி இடம்பெறுகின்றார். பேச்சுவன்மையினால் இவர் ஆற்றிவரும் சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி இவரை கௌரவிக்கின்றோம்,

---

இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய இலங்கைப் பெண் பேச்சாளர்களின் வரிசையில் தனக்கென்று ஒரு வழி அமைத்துக்கொண்டு, சுடர்விட்டுப் பிரகாசிக்கும் திருமதி வைத்தியநாதன் அவர்களை ''இந்து கலாசார'' இதழிற்காக சிறப்பு முறையில் செவ்வி கண்டோம்.

நீர்வளமும், நிலவளமும் மிக்க சோழநாட்டிலுள்ள தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்மையார் சென்னைப் பல்கலைக்கழக ''வித்துவான்'' பட்டம் பெற்று தமிழில் தேர்ச்சிபெற்று, சைவத்தையும், தமிழையும் தன்னிரு கண்களாகப்போற்றி வரும் தருமையாதீனத்தின் உயர்பள்ளியில் தலை

மைத் தமிழாசிரியராகப் பணியாற்றிக்கொண்டே ஆதீன சமயப் பிரசாரகராகவும் கடமையாற்றினார். இவரது தொண்டிற்கு உளம் மகிழ்ந்த தருமையாதீன 25வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை, சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் 1961 ஆவணி மூல விழாவில் இவர்களுக்குத் ''தொண்டர்திலகம்'' என்ற பட்டம் சூட்டி, தங்கப் பதக்கம் அளித்துப் பெருமைப் படுத்தினார்கள்.

தற்பொழுது இலங்கை வர்த்தக வங்கியில் உயர் பதவி வகிக்கும் திரு. வைத்தியநாதன் அவர்களை மணந்து 1962ல் இலங்கைக்கு வந்த அம்மையார் வீடு, கோயில், சமயப் பணி எனத் தனது வாழ்க்கையை வரையறுத்துக்கொண்டார் தனது அனைத்துப் பணிகளுக்கும் ஊக்கமும் உற்சாகமும் கொடுப்பவர் தனது துணைவரே எனக் கூறி மகிழ்கின்றார்.

1962ம் ஆண்டில் இருந்தே சைவத்திற்கும் தமிழிற்கும் பெருந் தொண்டாற்றி வரும் அம்மையாருக்கு நல்லையாதீனம் ''அருள்மொழி அரசி'' என்றும், கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தினர் ''செஞ்சொற் செல்வி'' என்றும், ஆவரங்கால் சிவன் கோவில் நிர்வாகத்தினர் 'விழைதமிழ் வித்தகி'' என்றும், புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் ''ஸ்ரீ வித்யா பூஷணி'' என்றும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை ''அருள்நெறி மாமணி'' என்றும், அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம் ''வாகீச கலாபமணி'' என்னும் பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தமை இவரது பயன் கருதாப் பணிக்குக் கிடைத்த மரியாதையே. கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 21-2-1993 ஞாயிறன்று மாலை இந்துசமய இந்துகலாசார அமைச்சு எடுத்த பக்திப் பெருவிழாவில் அம்மையார் ''ஞானசிரோன்மணி'' என்ற பொருத்தமான பட்டத்தினால் கௌரவிக்கப்பெற்றது போற்றத்தகுந்ததே.

இத்துணை சிறப்புக்களுடன் பொருந்திய திருமதி வைத்தியநாதன் அவர்களிடம் விடை பெறுகையில் ஒரு ஐயப்பாட்டை முன்வைத்தோம். அதுதான் புற்றுநோய்போல் பெருகிவரும் மதமாற்றம். அதற்கு அவர் கூறிய கருத்தாவது. . .

---

- மதமாற்றத்திற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். முதலாவது, இந்து மதத்தவர்களாகப் பிறந்தும், இம்மதப்பற்றிய ஆழ்ந்த அறிவும், பற்றும் இல்லாமை: இரண்டாவதாகப் பொருளாதாரக் குறைபாடு.

---

முதலாவதாகக் குறிப்பிட்ட குறைபாட்டை ஓரளவு நீக்க, இந்துசமய நிறுவனங்களும், ஆலயங்களும், அமைப்புகளும் முழுமூச்சாக ஈடுபட்டுப் பட்டி, தொட்டிகளிலெல்லாம் சமயப் பிரசாரத்தை மேற்கொள்ளவேண்டும். மக்களை மையமாகக் கொண்டு கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், சமய விளக்கங்கள், சிறு நாடகங்கள் (சமயக் கருத்தையொட்டிய) மூலமாக அவர்களின் உள்ளத்திற்குள் நுழைய வேண்டும்.

இரண்டாவதாகப் பொருளாதாரக் குறைபாடு. இது சற்றுக் கடினமான காரியம்தான் என்றாலும் முயலலாம் கன்னி முயற்சியாக கொழும்பிலே உள்ள சபைகள், சமய ஸ்தாபனங்கள் அற நிலையங்கள் அனைத்தும் ஒரு அமைப்பின்கீழ் ஒன்றுபட்டு ஒவ்வொரு பிரிவும் சில, குறிப்பிட்ட பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியை மகன்மை (தத்து அல்லது ஸ்வீகாரம்) எடுத்துக்கொள்ளவேண்டும். சான்றாக உங்கள் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் சுமார் 100 வீடுகளை நேரடிப் பார்வையின்கீழ் கொண்டுவந்து அங்கு வாழ்வோரின் குறைபாடுகள் அத்யாவசியமான தேவைகள், கல்வி வசதிகள், தொழில் வாய்ப்புக்கள் இவைகளைக் கண்காணித்து ஆவன செய்து அறிவுரை கூறி வாரத்தில் ஒருசில பணி நேரங்களை அவர்களுடன் செலவிட்டு அன்பினால் அணைத்துக்கொண்டால் இம்மதமாற்றத்தை ஓரளவு தடுக்கலாம். இதற்கு மிகப் பொறுமை தேவை. பொருளாதார உதவியை அளிக்க, தர்மவான்களும், அற நிலையங்களும் முன்வரவேண்டும்.

---

- இன்று தமிழ்நாட்டில் தவப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் இச்சாதனையை நிகழ்த்தி வருகிறார். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, 'அன்பு இல்லம்' இவர்கள் செய்கின்ற பணி நமக்கு ஓர் முன் உதாரணம்.

---

வேத பாடசாலைகள், சைவச் சிறுவர் அநாதை இல்லங்கள், சைவ முதியோர் இல்லம், இலவச மருத்துவ இல்லம் இவைகளை பொருள்வளம் கொண்ட ஆலயங்கள் முன்னின்று நடத்தலாம். (சான்று தெஹிவளை நகர் ஸ்ரீ துர்க்கையம்மன் கோயில்) ஆதரவு அற்ற பெண்களுக்குக் காப்பகங்கள் நிறுவி சுய தொழில் வாய்ப்பு அளிக்கலாம். இப்படி நமது பணிகளை விழாக்கள், வழிபாடுகள் என்ற அளவில்மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் சமயாசாரியர்களைப் போன்று மக்களுக்கு ஊடாகச்சென்று தொண்டாற்றினால் நாம் சமுதாயத்தினால் புறக்கணிக்கப்படவில்லை என்ற உள் உணர்வு அவர்களுக்கு உண்டாகும் என்று திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

நல்ல கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட உள்ள நிறைவுடன் அம்மையாருக்கு நன்றி கூறி செவ்வியை நிறைவுசெய்தோம்.

— நா. ஹரிதாஸ் —

# மலையகத்தவர்களுக்கென்று தனியானதோர் வயோதிபர் மடம்

## சப்பிரகமுவ மாகாணசபையின் உறுப்பினர் திருவாளர் ஜாலிய விமலரத்னவின் முயற்சியால் கேகாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது

தகவல் — மாத்தளை வடிவேலன் பி. ஏ.

முதுமை முதியோர்களை பராமரித்தல், வயோதிபர்களுக்கு வாழ்வளித்தல் என்பது தனி நபர்களின் பிரச்சினையாக மட்டும் முடங்கிவிடாது, சமூகத்தினதும் ஏன், மனித சமுதாயத்தினதுமே பொறுப்புமிக்க ஓர் அம்சமாகும். இதிலும் ஆதரிப்பாரின்றி அநாதைகளான முதியோர்களது பிரச்சினை தட்டிக் கழிக்க கூடிய ஒன்றல்ல.

நம் நாட்டில் பல வயோதிப இல்லங்கள் உள்ளன. இவற்றில் பல சுயேச்சையான சங்கங்களினாலும் பெரும்பாலானவை சமூக சேவைத் திணைக்களத்தின் ஒத்தாசையுடனும் இயக்குவதாகத் தெரிய வருகின்றது. ஒரு சில பகுதிகளில் மத ஸ்தாபனங்களும் இவ்வாறான நிலையங்களை நிறுவ பணி புரிகின்றன.

மலையக மக்களுக்கென்று குறிப்பாக தோட்டத் தொழிலாளருக்கு என்று தனியானதோர் வயோதிபர் இல்லம் இதுவரை செயல்பட்டதாக தெரியவில்லை. காலமெல்லாம் கொட்டும் மழையிலும் உயிர்கொல்லும் பனியிலும் உச்சி மலைச்சரிவில் உச்சைப் பிளக்கும் கொடூர கோடையிலும் காடு மலைகளெல்லாம் ஏறி இரத்தத்தை வேர்வையாக சிந்தி உழைப்போருக்கு தம் முதுமை காலத்தில் வாழ்க்கையை நடத்த இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் பெறக்கூடிய பயனும் அடையக்கூடிய நன்மையும் சொற்பமானதாகவே உள்ளன.

தமக்கு விபரம் தெரியாத காலத்திலேயே உழைக்கத் தொடங்கிவரும் மக்கள் மூப்படைந்தவுடன் ஏனைய தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியம் கிடைக்காமையால் அடையும் துயர் சொல்லும் தரமன்று. தமக்கென பிள்ளைகளைக் கொண்டுள்ள முதியோர்கூட நன்கு பராமரிக்கப்படாத நிலையில் இருப்பது கண்கூடு. இந்நிலையில் அனாதைகளான முதியோர்களது அவலநிலை விசனத்துக்குரியது. இவர்களுக்கு என்ன சமூகப் பாதுகாப்பிருக்கின்றது. கருவேப்பிலைகளாக, வெட்டும் மரங்களாக தூக்கியெறியப்பட்ட இவர்களுக்கு என்ன சமூகப் பாதுகாப்பு இருக்கின்றது. உழைத்து உழைத்து உடலும் நொந்த இவர்களை ஆதரிப்பாரின்றி மூப்பினாலும், நோய்களினாலும் தத்தெடுக்கப்பட்டு பிச்சையெடுக்கும் அவல நிலைக்குள்ளாகிறார்கள்.

பசுமையான தோட்டங்களை உருவாக்கிய இவர்கள் வஞ்சிக்கப்பட்டு பாதைக்கு வந்துவிடுகிறார்கள். சரித்திரத்தின் நாயகர்களான இவர்களை தரித்திரத்தின் நாயகர்களாக்கி நடுத்தெருவில் விடுவதையிட்டு நாம் அனைவருமே வெட்கப்படவேண்டும். அத்துடன் நாட்டிலுள்ள எந்த ஓர் முதியோர் இல்லமும் மலையகத்தில் உழைக்கும் வர்க்கத்தைச்சேர்ந்த இவர்களுக்காக இதய தடாகத்தை திறந்தது கிடையாது. வாஞ்சையோடு வாரியணைத்துங்காண்டதில்லை. இப்பெரும் குறையை நீக்கும் பெரும் பணியில் முதல் துடிப்பாக சப்பிரகமுவ மாகாணசபையில் கேகாலை மாவட்ட பிரதிநிதியாக விளங்கும் திரு. ஜாலிய விமலரத்தின அவர்கள் சீரிய முயற்சியை ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியூட்டுகின்றது. திரு. ஜாலிய விமலரத்தின மலையக மக்கள்மீது பற்றும் பாசமுமிக்கவர். அவரது இச்சீரிய பணிக்கு நல்லிதயம்கொண்ட அனைவரும் வாரி வழங்கவேண்டும் இலங்கையின் கேகாலை மாவட்டத்தில்தான் முதல் வயோதிப இல்லமொன்று முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு உண்டு.

இம் மாவட்டத்திலேயே மலையகத் தோட்டத் தொழிலாளருக்கென்று தனியாக ஓர் வயோதிப மடத்தை நிறுவும் முயற்சி வரவேற்கத் தக்கது திரு. ஜாலிய விமலரத்தின அவர்களோடு அம்பலாபிட்டிய திரு. பிரேமநாதன் திரு. ஆறுமுகம் (அதிபர்) திரு. எஸ். மரதன் அவர்கள், திரு நமசிவாயம் ஆகியோர் இணைந்து செயல்படுவது நம்பிக்கையளிப்பதாக உள்ளது.

மலையகத் தலைவர்களும் மாண்புமிகு அமைச்சர்களுமான சௌமியமூர்த்தி தொண்டமான் திரு. எம். எஸ். செல்லச்சாமி, திரு. ப. பி. தேவராஜ் ஆகியோருடன் அருட்செல்வர் வி. டி. வி. தெய்வநாயகம் பிள்ளை உட்பட மற்றும் பல பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டினது வளத்தினை ஓங்கிடச் செய்து
நல்ல பெருவாழ்வை மக்கள் ஏகிடசெய்து
தேட்டமது இன்றி சோர்ந்திட்ட
இம்மூதியாரின் வாழ்வு சிறக்க
அனைவரும் ஒத்துழைப்பு நல்கிடுவீர்



லஸ்தாபனத்திற்கு வருகைதந்த மாண்புமிகு அமைச்
கெளரவ பி. பி. தேவராஜ், திருமலை அரசாங்க
பர், ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.
. கே. செல்வராசா.



திருக்கோணேஸ்வரர் பாலஸ்தாபனத்தின்போதுஅன்பு இல்லத்தைச் சேர்ந்த, இளம் சிறார்கள் பண்ணிசை பஜனை செய்யும் காட்சி.




கொழும்பு இந்து இளைஞர் மன்றம் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடாத்திய இந்துசமய எழுச்சி விழாவில் பேச்சுப் போட்டியில் சிறந்த மாணவிக்கு சுவாமி ஆத்மகனானந்தா பரிசு வழங்குவதையும் அருகே மாரிமுத்து செட்டியார் அவர்களும், கொழும்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. தே. செந்தில்வேலவர் அவர்களும்.



பூரண கும்பம் கொண்டுவரும் காட்சி. பிரதம சிவாசார்யர் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், இதர சிவாசார்யர்கள் சகிதம் கும்பவலம் வரும்போது பிடிக்கப்பட்ட படம்.




அருள்மொழியரசு கிருபானந்தவாரியார், அமைச்சர் தேவராஜ் மற்றும் பக்திப்பெருவிழாவில் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட எழுபத்தேழு ஆன்மீகப் பெரியோர்களும்.



அருள்மொழியரசு கிருபானந்தவாரியாருடன் அமைச்சர் பி. பி. தேவராஜ், அவரது அந்தரங்கச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன், கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் அங்கத்தவர்கள் சிலரும்.




மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருட்கடாட்சம் பெற்றுத்திரும்புகையில் மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களுடன், மாத்தளை நகர பிரதி மேயர் திரு. எஸ். சிவஞானம், மாத்தளை முத்து மாரியம்மன் ஆலய தர்மகர்த்தா தலைவர் திரு. த. மாரிமுத்து செட்டியார், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆகியோர்கள்.



பல ஆண்டுகளாக மௌனத்தவமியற்றிவருவதோடு, ஆலயம், பாடசாலை, மருத்துவமனை எனபவற்றை நிர்வகித்துவரும் பாலமுருகனடிமை சுவாமிகளுடன் அமைச்சர் தம்பதியினர்.




சிரவை ஆதீன முதல்வரும் சிறந்த தமிழ்ச்சான்றோருமாகிய சுந்தர சுவாமிகளுடன் ஆன்மீகக் கலந்துரையாடலும் இலங்கை வருமாறு அழைப்பும்.



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டி. சி. மோகன் அவர்களிடம் இந்து அமைச்சின் பிரசுரங்கள் கையளிப்பு:



பிரபல தொழிலதிபரும், வள்ளலார் பணிமன்றத் தலைவருமான பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களுடன், இலங்கையில் வள்ளலார் கருத்துக்களை பரப்புவது தொடர்பான உரையாடல்.



கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்த இனங்களுக்கிடையிலான ஒற்றுமை விழாவின்போது, மேமன்கவிக்கு இந்து இளைஞர் மன்ற போஷகர் சண்முகரத்தினசர்மா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றார்:









கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடுசெய்த இந்து இளைஞர் கொடி தினத்தின்போது மாண்புமிகு அமைச்சர்களான சௌ. தொண்டமான் அவர்களுக்கு மன்றப் பொருளாளர் நா. புஸ்பராஜாவும், மன்சூர் அவர்களுக்கு போஷகர் சண்முகரத்தின சர்மா அவர்களும், எம். எஸ். செல்லச்சாமி அவர்களுக்கு மன்றத் தலைவர் செந்தில்வேலவர்அவர்களும், கொழும்பு மாநகர பிரதி மேயர் உயர்திரு கே. கணேசலிங்கம் அவர்களுக்கு மன்றத் தலைவர் அவர்களும் கொடி அணிவித்தபோது: அருகே மன்றப் பிரதிநிதிகள் செந்தூரன், இளங்கோ, சிவகுமார் ஆகியோரும் காணப்படுகிறார்கள்.

# சுவாமிஜி காட்டிய வாழ்க்கை விளக்கம்

— ம. சண்முகநாதன் —

திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகரான குருமணி ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தாஜி அவர்கள் மகா சமாதி அடைந்து இன்று 16-ம் திகதி இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

சமய குரவர்கள், அல்லது ஞானிகள், மிகச் சாதாரண மனிதர்களைப் போல வாழ்ந்து மறைந்து விடுவதுண்டு. எவ்வித பிரதிபலனுங் கருதாது மிக எளிமையாக, விளம்பரமேதுமின்றி உலகிவிட்டு மறைந்த பின் அவர்கள் தீர்க்கதரிசிகளாகவும் மனுக்குலத்தைக் கடைத்தேற்ற வந்த கருணைக் கடவுளாகவும் தென்படுகின்றனர்.



இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அண்மையில் திருமலைக்கு விஜயம் செய்திருந்தபோது சிவயோக சமாஜத்திற்கு விஜயம் செய்து சுவாமி கங்காதரானந்தாவுக்கு அஞ்சலி செலுத்தினார். அமைச்சருடன் நிற்பவர் திரு. முத்து அவர்கள்.

இங்ஙனம் வாழ்ந்து சமாதி அடைந்த ஒரு மஹாபுருஷரே ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்களாவார். கோணேசப் பெருமான் காலடியிலே கடுந்தவம் புரிந்து. ஞானம் பெற்று, தாம் பெற்ற பேரின்பப் பெருவெள்ளத்தை பக்தர்களுக்கும் ஊட்டியவர் சுவாமிஜி.

கேரளத்தில் உயர் பிராமண குலத்திலே பிறந்த சுவாமிஜி அவர்கள் 1940ம் ஆண்டளவில் இலங்கை வந்தார். கதிர்காமத்தையும், திருகோணமலையையும் தனது தவத்திற்குரிய நிலையங்களாகத் தேர்வு செய்தார். அடர்ந்த காடுகளுக்குள் சென்று தவமும் தியானமும் மேற்கொண்டார். இறுதியாக திருகோணமலை பிரதான வீதியில் சிவயோக சமாஜம் அமைத்து அருளாட்சி ஆற்றினார்.

சமாஜத்திற்கெனப் பெறப்பட்ட பண்மதவாச்சி வயலில் இறங்கி வேலை செய்யும்போது ஒரு கடுமையான உழைப்பாளியாகவும், பக்தர்களை அரவணைக்கும் போது கருணைத்திறம் நிறைந்தவராகவும் காட்சி தந்தார். சமாஜத்திற் பாடப்படும் பஜனைப் பாடல்கள் சுவாமி அவர்களாலேயே இயற்றப்பட்டவை. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கச் செய்கின்ற வார்த்தைகள் நிறைந்தவை. பஜனையே மிக எளிமையான ஆத்ம சாதனம் என உணர்த்தியவர் சுவாமிஜி அவர்கள்.

சுவாமிஜியிடப், அருள்நாடி அணைந்த பக்தர்களுக்கு அவரவர் மனப் பக்குவத்திற்கேற்றவாறு உபதேசமளித்தவர். ஆயினும் தன்னை நம்பி சரணடைந்தோரை ஒருபோதும் கைவிடாது காத்தவர். துன்பங்களும் வேதனைகளும் அடைகின்ற ஆயிரக்கணக்கான பக்தர்களின் உடல், மன உபாதைகளை தாவே தனது உடலுக்குள் ஏற்று வருந்தியவர்.

அவரது ஞான வாழ்வும், இன மத மொழி பேதமின்றி மனித சமுதாயத்தை உய்வடையச் செய்வதற்காக அவர் விட்டுச் சென்ற தத்துவங்களும் எவரும் பின்பற்றத் தக்கவாறு எளிமை நிறைந்தவை.

## சுவாமிஜி காட்டிய . . .

### மனத் தூய்மை:

மனத் தூய்மையே சுவாமிஜி அவர்களின் போதனைகளின் சாரமெனலாம். இதயத்தைத் தூய்மைப் படுத்தும் போது சிந்திக்கும் ஆற்றலும் செயலாற்றும் திறமையும் அற்புதமாகப் பெருகும் என்றும், நமது சிறு செயலும் சிற்றறிவுங்கூட பேராற்றலோடு வெளிப்படும் எனவும் உணர்த்தினார். மனத்தூய்மை நிறைந்த மனிதனாலேயே மனதை வலிமை மிக்க தாக்க முடியும். மனம் வலிமை பெறும்போது அதீத சக்தியுடையதாகும். அதீத சக்தி மிக்கோரால் அளப்பருங் காரியங்களை ஆற்றமுடியும். எனவே மிகச் சிறிய அன்றாடக் கடமையிலிருந்து மகத்தான காரியம் வரை மனச் சுத்தத்துடன் செய்ய வேண்டுமென சுவாமிஜி அவர்கள் வலியுறுத்தினார்.

''கேடுகள் பூமியில் இருந்தும், வானத்தில் இருந்தும் உருக்கொள்ளவில்லை. அவை மனித மனத்திலிருந்தே சிருஷ்டிக்கப்பட்டன. பேராசையும், சுயநலமுமே கேடுகள் தோன்றுவதற்குக் காரணமாகும். இவ்விரு தீய குணங்களினாலேயே உலகம் நாசத்தின் திசை நோக்கி நகர்கிறது. ஜனங்களின் நல்ல மனநிலைதான் உலகக்ஷேமத்தின் ஆதார வித்தாகும். மனிதர்கள் களங்கமற்ற மனத்துடன் நற்குண சீலர்களாக வாழ்ந்தால் கலகமும் கலக்கமும் இருக்க மாட்டா'' என உபதேசித்தார் சுவாமிஜி அவர்கள்.

### வாழ்க்கை:

அந்தரங்க சுத்தி இல்லாத ஒரு சமயவாதியை விட நல்லொழுக்கம் உடைய ஒரு நாஸ்திகன் மிகச் சிறந்தவன் எனக் கூறும் சுவாமிஜி அவர்கள், வாழ்க்கை எப்போதும் ஒரு நெறியையும் ஒழுங்கையும் உடையதாக இருக்கவேண்டும் எனக் கூறுவார். தினமும் எழுந்திருப்பது உணவுண்பது, உறங்குவது, நீராடுவது, இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுவது அனைத்தையும் ஒழுங்குமுறைப்படி ஆற்ற வேண்டும் என உபதேசிக்கிறார்.

''சிறந்த ஒரு இலட்சியம், இறைபக்தி, உடல் நலம், மனக்கட்டுப்பாடு, செயல்களில் ஒழுங்கு, மனத் தூய்மை, செயல் தூய்மை, குடும்ப நல்லுறவு இந்த எட்டுக் குணங்களையும் வளர்த்தெடுத்தல் வாழ்க்கையை சுவர்க்கமாக்கும்.

மனிதர்களிடம் மட்டுமன்றி, எல்லா உயிர்களுக்கும் இரக்கங்காட்டுதல், எவருடனும் மரியாதையுடன் பழகுதல், இயன்றளவு தர்மம் செய்தல், பிரதி பலன் கருதாது பொதுச் சேவைகள் செய்தல், எக் காரணம் கொண்டும் எவரையும் வெறுக்காதிருத்தல், சமுதாயத்தின் ஒரு பகுதிதான் நாமும் என்ற சம பாவனையுடன் வாழ்தல், அவசியமில்லாத விருந்துகளில் கலந்துகொள்ளாதிருத்தலும் அத்தகைய விருந்துகளை நாமும் செய்யாதிருத்தலும், எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையுடன் இருத்தல், சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிமைப்பட்டுப் போகாத கொள்கையுள்ள மன உறுதி, உலகத்தவரின் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கருதாது இருத்தல், ஆகிய குணங்களே ஒரு மனிதனையும் அவனது வாழ்வையும் மேன்மையுறச் செய்யும் என்பது சுவாமிஜி அவர்கள் அறுதியிட்டுக் கூறிய நெறிகளாகும்.

சந்தேகம் கொள்வதும், பிறரைக் குறை கூறுவதும், பணத் தொடர்புகளில் நாணயமற்று நடப்பதும், தீயவர் சகவாசமும் அறவே ஒழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இங்ஙனம், அமைதியும் தெய்வீகமும் மிக்க வாழ்க்கை வாழ்வதற்கு முறையான உடற்பயிற்சியும், சாத்வீக உணர்வை வளர்க்கும் உணவுப் பழக்கமும் மிகவும் அவசியமானது எனக் கூறுகின்ற சுவாமிஜி அவர்கள், யோகாசனப் பயிற்சிகளே சிரேஷ்டமான உடற் பயிற்சிகள் எனவும், தாவர உணவே மனதிற்கு சாந்தம் தருகின்ற இயற்கை உணவு எனவும் வலியுறுத்தினார்.

இந்த எளிய வாழ்க்கை முறைகளைக் கடைப் பிடிக்கும் போது மனம் தெளிவு பெற்றுத் தூய்மை அடைவதால், இரவுப் பொழுதுகளில் அமைதியான உறக்கம் ஏற்படும். கனவுகளும் மன உளைச்சலும் இருக்காது. உறங்கி விழித்தபின் புத்துணர்வும் அமைதியும் சந்தோஷமும் திகழும் சூழலும், பொழுதும் தெய்வீகமானதாகவும் இன்பம் நிறைந்ததாகவும் இருக்கும்.

### தர்மம்:

மனித சமுதாயத்தின் நிலைபேற்றுக் காரணமாயிருப்பதே தர்மம். என்றும் நிலைத்திருக்கின்ற காரணத்தால் இது சனாதன தர்மமாகும். தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கிறது. இயற்கை நியதிகளான உயர்வு தாழ்வு போன்று தர்மமும், அதர்மமும் தேய்ந்து வளர்கின்றன.

மனிதர்கள் தர்ம வழியில் வாழ வேண்டும். கருணை நிறைந்துள்ள இடத்திலேயே தர்ம உணர்வுகள் பெருகி இருக்கும். இந்த நிலை மாறி அதர்மம் ஓங்கும்போது நீர் வற்றிய குட்டையில் இறக்கும் மீன்கள் போல மனித சமுதாயமும் பஞ்சமா பாதகங்களால் துடிதுடித்து மாயும்.

தர்மம் முதல் நிலையில் இல்லறத்திலே தொடங்க வேண்டும். தாயும் தந்தையும் தர்மவழியில் நடப்பவர்களாய் இருப்பின் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நற்குணசீலர்களாகப் பிறந்து வாழ்வார்கள். இத்தகைய ஒரு பரம்பரையின் மூலமாகவே கலாசாரம், பண்பாடு, மனிதநேயம் என்பன அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்படும்.

## சுவாமிஜி காட்டிய . . .

### ஆலயம்:

ஆலயங்கள் ஆன்மலயத்திற்குரியவை. அருவமாயிருக்கும் அருட்சக்தி ஆலயங்களிலேயே சேமித்து வைக்கப்படுகின்றது. மந்திரம், தோத்திரம், அபிஷேகம், அர்ச்சனை முதலியன அருட் சக்தியைச் சேமிக்கும் கருவிகளாகும். இந்த சக்தியை, பிரார்த்தனை வழிபாடு, தியானம் ஆகியவற்றின் வழியாக நாம் பெற்றுக்கொள்கிறோம். இந்த சக்தியே மனித சமுதாயத்தின் ஜீவகளை மிக்கதாக்குகின்றது.

ஆலயத்தை இயக்கும் சுவாச நாடிகளாக விளங்குபவர்கள் ஆலய குருமார்களும் தர்ம கர்த்தாக்களும். ஆலயங்களில் தூய்மை நிலவ வேண்டும். பக்தி பெருகத் தக்கவாறு அருளுரைகள் இடம்பெற வேண்டும். அப்போதுதான் ஆலயம் வருவோரின் மனம் சாந்தமடையும்.

ஆனால் தற்காலத்தில் அமைதியைக் கருதி தொழிற்சாலைகளில் பொருத்தும் இயந்திரங்கள்கூட சப்தமில்லாமல் இயங்கும் வகையில் செய்யப்பட்டு வருகின்றன. அங்ஙனமிருக்க ஆத்மசாந்திக்கும் அமைதிக்கும் வந்த ஆலயங்களில், இன்று சித்தத்தைக் கலக்கிக் காதைச் செவிடாக்கும் அசுர ஒலிகளால் அமைதி குலைக்கப்படுகின்றது. ஆலயத்தில் ஆரவாரமும் ஆடம்பரமும் நிறுத்தப்படல் வேண்டும். அருட் சக்தியின் பொலிவுக்கும், பக்திக்கும் வழி செய்வதான காரியங்கள் மட்டுமே ஆலயங்களில் ஆற்றவேண்டும்.

### அரசதர்மம்:

சுவாமிஜி அவர்கள் அரசியலைப்பற்றி மிகத் தெளிவானதும் தீர்க்கமானதுமான கொள்கைகளைக் கொண்டிருந்தார். அறநெறியும், அரசாட்சியும் உடலும் உயிரும் போன்றவை என்பது சுவாமிஜி அவர்கள் காட்டிய உதாரணமாகும்.

சொல்லும், செயலும், சிந்தனையும் தாய்மொழியின் மூலம் செயற்படுவதே வாழ்க்கையின் பிரதான சுதந்திரம் என உணர்த்தினார்.

''அரசியல், பொருளாதாரத் தத்துவங்கள் சமயக் கொள்கைகளுக்கு மாறானவையல்ல. அவை சில மகத்தான உண்மைகளின் அடிப்படையில் சிந்தனை செய்து செயற்படுத்தப்படும் போது சமயம் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறது.

ஒவ்வொருவரும் தத்தம் தேசிய, கலை, கலாசாரங்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு அரசியலமைப்புக்கு மாத்திரந்தான் ஆதரவளிக்க வேண்டும். அதுவே ஒரு மனிதனின் முழுச்சுதந்திரத்தை பிரதிபலிக்கிறது.

மத விசுவாசமுடைய சிறந்த அரசாட்சியின் துணையால்தான் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நிறுத்த முடியும். மக்கள் தர்மத்தை அநுஷ்டிக்கும் வகையில் ஆட்சி செலுத்தவேண்டும். ஆட்சி தர்மநெறியில் இருந்தால்தான் மதப் பிரசாரத்தினாலும் பயன் ஏற்படும்.

அன்னை, தந்தை, ஆசான், அரசன் நால்வரும் அறநெறியில் வாழ்வாராகில் கெட்ட பிள்ளையும், கெட்ட சிஷ்யனும், கெட்ட பிரஜையும் இருக்க முடியாது. தர்ம நெறியில் வாழும் ஒருவருக்கு அரசியல் சலுகைகளும், பாதுகாப்பும் அவசியமில்லை.

இங்ஙனம், எந்த நாட்டுக்கும், எத்தகைய மக்களுக்கும் பொருந்தத் தக்கதான கருத்துகளை சுவாமிஜி அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்.

சாதாரண மனிதர்கள் மட்டுமன்றி, அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், தத்துவவாதிகள், மதப் பெரியோர்கள் பலரும் சுவாமிஜி அவர்களை தரிசித்து ஆசி பெற்றுள்ளனர். ஒருமுறை சுவாமிஜி அவர்களை தரிசனம் செய்தோர், தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டதோடு சுவாமிஜி அவர்களின் வழி நடத்தலையே பின்பற்றி வாழ்ந்தனர். வாழ்ந்து வருகின்றனர்.

தெய்வாம்சம் நிறைந்த அந்த கருணை சொரூபத்துக்கு முன்னால், மத, மொழி, இன, சாதி, உயர்வு, தாழ்வு, வேறுபாடுகள் தென்படுவதில்லை. சுவாமிஜி அவர்கள் அமைத்த சிவயோக சமாஜத்தின் இலட்சிய வாசங்கள் ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' ''நாமெல்லாம் மிகப்பெரும் காரியங்களை ஆற்றப் பிறந்திருக்கிறோம்'' என்பனவாகும்.

இன்றும் திருகோணமலை பிரதான வீதியில், சுவாமிஜி அவர்களின் அருளாட்சியின் சின்னமாக ''கங்காதரானந்தா சமாதி'' கம்பீரமாக காட்சி அளிக்கிறது. அமைதியும், சாந்தமும், நிறைவும் மிக்க வாழ்வு வாழ விழைவோர் அனைவருக்கும் சமாஜத்திலிருந்தும் அருள் அலைகள் பரவிக்கொண்டே இருக்கின்றன.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

(சுவாமிஜி அவர்களின் உபதேசங்கள் 'ஞானமண்டலம்' 'ஞானச்சுடர்' ஆகிய நூல்களிலிருந்து பெறப்பட்டன.)

நூலகம்

மோகம் மிகவும் ஆழமான சக்தி போன்றது. இதில் சிக்குண்டவன் தீய பிறவிகளுக்கு ஆளாகி உழல்கிறான். - சமணம்

# காலத்தின் கோலங்கள்

சாலங்கள் மாறிவர மனித கோலங்கள் மாறும் என்றால்
இயற்கை அன்னையவள் தன் கோலம் மாற்றி விட்டால்
இம்மானிடரின் வாழ்க்கை நிலை அலங்கோலம் ஆகிவிடும்

விதையொன்று விதைக்க சுரை யொன்று முளைப்பதில்லை
காலங்கள் மாறிடினும் மூதோர் காத்துவந்த பண்பாடு மாறாது
பண்பாடு மாறி வந்தால் அவர் திண்டாடித் தெருவில் நிற்பார்
கொண்டாடித் திரிந்தோரும் அண்டிடவே அஞ்சிடுவார்

தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லையென பாடிவைத்தார் அன்று
சில தாய்மார் கோயிலையே அடியோடு மறந்துவிட்டார் இன்று
நாகரிக மங்கையர் நாங்களென மனதினிலே நினைக்குமவர்
உலக நாயகன் நாமமதை நாளேனும் நினைப்பதில்லை

இனியேனும் அவர் திருந்தி நம் கலாசாரம் பேணவேண்டும்
காளையர் கன்னியர்கள் அலங்கோலம் அண்டைந்திடாது காக்கவேண்டும்
கருவறையில் காத்த மகளைக் கடற்கரையில் காளையுடன்
உலவ விட்டு காலம் கடந்தபின்னே வீட்டறையில்
பூட்டி வைத்து காத்து என்ன பயன்

சான்பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை என்பதனால்
தன்பிள்ளை நடவடிக்கை காணாது விட்டுவிட்டால் சொல்லொனா துயருருவார் பின்னாளில்
ஓரைந்து வயதினிலே பண்பதனை அன்புடனே ஊட்டி வளர்த்த பிள்ளை
நாளைந்து பருவமதில் சான்றோனாய்த் திகழ்வதிலே விந்தையில்லை

கன்னியர்கள் மனக்கோலம் கருத்தறிய தாய்க்குலம் தவறியதால்
அன்னையவள் எண்ணப்படி மகள் பெற்றாள் திருமணக்கோலம்
சனப்பெருக்கம் உயர்வடைய தன்பங்கும் தவறாது அவள் சேர்த்தாள்
உதவாத பிள்ளையெனில் யார் கொடுத்தார் அந்தக் கோலம்

கோலங்கள் மாறியதால் மன ஓலங்கள் பல திசையும் கேட்கிறது
அதைத் தணித்திடுவோம் என்று சிலர் ஜாலங்கள் புரிகின்றார்
செப்புத்தகட்டினிலே மந்திரம் எழுதியதைக் கழுத்தினிலே மாட்டுகின்றார்
பூசாரி சொன்ன சாத்திரம் பலித்திடவே பாத்திரம் அறியாது
மக்கள் பணம் தன்னை விழலுக்கு நீராய் இறைக்கின்றார்

அலங்கோலம் மாற்றுதற்கு வழியேதும் உளதோ என்பார்
ஆயிரமாம வழிகளுண்டு ஒரு சிலவே போதும் என்பேன்
எந்தமதம் என்றாலும் அறநெறியில் பிறழாது வாழ்ந்திடுவீர்
இருபாலும் கற்புநிலை காத்து நன்றே மனையாட்சி செய்திடுவீர்
மெல்ல மெல்ல அவலம் நீங்கும்.

ஆக்கியவர்: வே. தயாபதி

# ஐயப்ப தரிசனம்

— ஆ. கோமதிநாயகம் —

ஐயப்பனை மணிகண்டன், தர்மசாஸ்தா, ஹரி ஹரபுத்திரன், ஐயனார் என்னும் பல்வேறு நாமங்களால் நாம் போற்றுகிறோம்.

கேரள நாட்டின் பம்பை நதிக்கரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இந்தப் பெருமானின் வழிபாடு கடுமையான விரத அனுஷ்டானங்களைக் கொண்டு விளங்கி வருகிறது.

கட்டுப்பாடு, ஒழுங்கு, புலனடக்கம், தானம், ஜாதி மத பாகுபாடின்மை முதலியன இந்த வழிபாட்டில் முதன்மை பெறுகின்றன.

இவரது வரலாற்றை இங்கு சுருக்கமாகக் காண்போம்.

## மகிஷிமுகி தோற்றம்

காலவ மகரிஷியின் மகள் லீலா. அவள் தன் கணவரான தத்தனால் மகிஷி (எருமை வடிவு) ஆகும்படி சாபம் பெற்று மகிஷாசுரன் தங்கை மகிஷிமுகியாகப் பிறந்தாள்.

அவள் பிரம்மாவை நோக்கித் தவம் இருந்து, ''சாதாரண மனிதர்களாலும், ஆயுதங்களாலும் எனக்கு மரணம் ஏற்படக் கூடாது. ஹரிக்கும் ஹரனுக்கும் புத்திரனாகப் பிறந்து மனித வடிவில் பன்னிரண்டு ஆண்டுகள் ஓர் அரசகுமாரனாக வாழும் திருக்குமாரனே என்னை அழிக்க வேண்டும்'' என வரம் பெற்றாள்.

மகிஷிமுகியின் தொல்லைகள் தாங்காமல் தேவர்கள் திருமாலிடம் முறையிட்டார்கள். அவர்களும் அவர்களுக்கு உதவுவதாகக் கூறினார்.

## ஐயப்பன் தோற்றம்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் அமுதம் கடைந்தார்கள்.

அமிர்தத்தைத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பிரித்துக்கொடுக்க ஸ்ரீமந் நாராயணன் மோகினி அவதாரம் எடுத்தார்.

அசுரர்களை மயக்கி அமுதத்தைத் தேவர்களுக்கே வழங்கிய திருமால், அதே மோகினி வடிவத்துடன் சிவபெருமானைக் காணச் சென்றார்.

மகிஷிமுகியின் அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக் காக்கும் பொருட்டு சிவ—விஷ்ணு சக்திகள் ஒரு திருக்குமாரனை மார்கழி மாதம் பஞ்சமி திதி சனிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் உருவாக்கினார்கள்.

அந்தத் திருக்குமாரனைப் பிரம்மாவிடம் ஒப்படைத்தார்கள்.

சகல கலைகளிலும் வல்லவரான பிரம்மா அக்குமாரனை ஏற்று 'தர்ம சாஸ்தா' என்று பெயர் சூட்டி சகல கலைகளையும் வழங்கினார்.

## மணிகண்டன்

சிவபெருமான் அந்தக் குமாரனின் கழுத்தில் தன் கழுத்தில் இருந்த ரத்தின மாலையைச் சூட்டி 'மணிகண்டன் என்று பெயர் வைத்து, பூலோகம் சென்று பணியை நிறைவேற்ற அனுப்பினார்.

கேரள நாட்டில் பம்பையை அடுத்த நாட்டை ஆண்ட ராஜசேகரன் என்னும் பாண்டிய மன்னன் வேட்டையாடக் காட்டிற்கு வந்தான். அப்போது அத்திருக்குமாரனைக் கண்டு எடுத்துவந்து தன் மனைவியிடம் சேர்ப்பித்தான்.

குழந்தை இல்லாத அந்தத் தம்பதிகள் கழுத்தில் மணிமாலையுடன் இருந்ததனால் குழந்தைக்கு மணிகண்டன் என்னும் பெயரிட்டு வளர்த்தனர்.

## இருமுடி

தாயின் தலைவலிக்கான மருந்தாகப் புலிப்பாலைக் கொண்டுவர மணிகண்டன் புறப்பட்டான். அப்போது அரசன் மணிகண்டனுக்கு நெய், தேங்காய், அரிசி முதலிய உணவுப் பொருள்களை ஒரு பக்கமும், பூஜைப் பொருள்களை மறுபக்கமும் இருமுடியாகக் கட்டி அனுப்பினார்.

அந்த இருமுடி கொண்டு கையில் வில்லும் அம்பும் ஏந்தி பம்பையாற்றை நோக்கி மணிகண்டன் சென்றார்.

காட்டில் சிவகணங்களும் ரிஷிகளும் மணிகண்டனைத் தரிசித்து, நீலமலை மேட்டில் நவரத்தினச் சிம்மாசனம் அமைத்து அவரை எழுந்தருளச் செய்தனர்.

ஐயப்ப தரிச . . .

அந்தத் தலமே இப்போது 'பொன்னம்பலமேடு' என்று வழங்குகிறது.

பிறகு மகிஷியை அழிக்க மணிகண்டன் புறப் பட்டார்.

## மகிஷிமுகி மறைவு

இந்திரனின் பட்டினமான அமராவதியில் இருந்த மகிஷிமுகியின் கொம்புகளைப் பிடித்து ஆகாயத்தில் எறிந்தார் மணிகண்டன்.

ஆதலால் அவள் பம்பை ஆற்றின் கரையில் உள்ள அல்சா என்ற இடத்தில் வீழ்ந்தாள்.

அவளை அழிக்க முற்படும்போது சிறந்த பக்தை யான அவள் சிவபெருமானைத் துதிக்க, அதனால் மனம் மகிழ்ந்த மணிகண்டன் அவளைத் தொட்டு ஆசீர்வதித்தார். ஹரிஹரனான இவரது திருவுடல் அவள்மீது பட்டதும், அவள் சாபவிமோசனம் பெற்று அழகிய மங்கையாக வடிவெடுத்துத் தன்னை மனை வியாக ஏற்றுக்கொள்ளும்படி மணிகண்டனை வேண் டினாள்

பெருமான், பிரம்மச்சரியத்தின் சிறப்புகளை அவ ளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பிறகு அவளைத் தன் அன்புச் சகோதரியாக ஏற்று, தான் கோயில் கொள்ளவிருக்கும் இடத்தின் வலப்புறம் 'மஞ்சுமாதா' என்னும் திருநாமத்துடன் எழுந்தருள ஆசீர்வதித்தார்.

அவள் ஜோதி வடிவமாக மறைந்தாள்.

## கல்லிடுங்குன்று

மகிஷிமுகியின் பூத உடல் மட்டும் அவளது தவ வலிமையால் வளரவே, பெருமான் காலால் அதை உதைத்தார். அது அமுதா நதிக்கரையில் போய் வீழ்ந்தது.

தேவர்கள் அந்த உடல்மீது கற்களை வீசி மூடி னார்கள்.

அதுவே இப்போது பழக்கத்தில் வந்து பக்தர்கள் அமுதா நதியில் நீராடி கல் எடுத்து வந்து கல்லைப் போடுகின்றனர்.

எனவே அந்த இடம் 'கல்லிடுங்குன்று', கல்நெ டுங்குன்று' என்று வழங்கி வருகின்றது.

## சபரிமலை

சபரி, ஸ்ரீராமபிரான் அருளால் மோட்சம்பெற்ற இடமேதான் எழுந்தருள ஏற்ற இடம் என மணி கண்டப் பெருமான் தேர்ந்தெடுத்தார்.

ஐயப்பன் தன் கோயில் அமைய வேண்டிய இடத் தைப் பந்தளத்தில் இருந்து ஓர் அம்பை எடுத்து எறிந்து, அது விழும் இடத்தில் கோயிலை நிர்மா ணிக்கும்படித் திருவாய் மலர்ந்தருளினார்.

அவர் சரம் எய்த இடமே இன்று 'சரங்குத்தி ஆல்' என வழங்குகிறது.

இன்றும் ஐயப்பன்மார்கள் தாங்கள் கொண்டு வரும் சரம், வாள், கதைகளை இங்கு போட்டுச் செல்கிறார்கள்.

சரம் குத்திய இடத்தில் மன்னன் அகத்திய முனி வரின் துணைகொண்டு கோயில் எழுப்பினார். ஐயப் பன் திருவுருவத்தை பரசுராமர் பிரதிஷ்டை செய் தார்.

இங்கு ஐயப்பன் யோக மூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

## பதினெட்டாம் படி

ஐயப்பனைத் தரிசிக்க செல்லும் பக்தர்கள் பதி னெட்டு படிகளை ஏறிக் கடந்து செல்ல வேண்டும்.

புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் என்னும் இந்தப் பதி னெட்டையும் கடந்து யோக மூர்த்தியாகக் காட்சி தரும் சாஸ்தாவைத் தரிசிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு படியாகக் கொண்டு தேங்காய் உடைத்து படிகளில் வழிபடுவது வழக்கம். இந்தக் கருங்கல் படிகள் தேவலோகத்தில் உள்ள விஸ்வகர்மாவால் கட்டப்பட்டதாக ஐதீகம்.

ஐயப்பனின் மெய்க்காவலர்களான கொச்சுக் குடுத்தை, வலியக்கடுத்தை ஆகிய இருவருக்கும் இரண்டு கோயில்கள் படிகளின் வலப்புறமும் இடப் புறமுமாக உள்ளன.

இவர்களை வணங்கி இவர்களின் உத்தரவை மானசீகமாகப் பெற்றுக்கொண்டு, பதினெட்டாம்படி யில் தேங்காய் உடைத்து இருமுடியுடன் ஏற வேண் டும்.

இருமுடி உள்ளவர்களே இந்தப் படியின் வழி யாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

பதினெட்டுப்படிகளிலும் பதினெட்டுத் திருநாமங் களுடன் மணிகண்டன் எழுந்தருளியிருக்கிறார்.

அந்தப் பதினெட்டுப் பெயர்களும் வருமாறு:

குளத்தூர் பாலன், ஆரியங்காவு ஆனந்த ரூபன் எரிமேலி ஏழைப் பங்காளன், ஐந்து மலைத் தலைவன்.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

# சேக்கிழாரின் கவிநலன்

கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.
(தமிழ் விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

தெய்வமாகக் கவி சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணத்தை அருளியவராவார். பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக மிளிருகின்றது. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் கவிவலவனாக விளங்குபவர் சேக்கிழார் சுவாமிகள். பெரிய புராணம் என்னும் இலக்கியம் ஒரு புறமாக, அதன் ஆசிரியர் குன்றத்தூர்ச் சேக்கிழாரது கவிதாசாமர்த்தியத்தில் வரும் தனித்துவம் மறுபுறமாகவும் நோக்குதற்குரியன. புராணங்களுள் முதன்மையும் தனித்துவமும் சிறப்பும் கருதியே திருத்தொண்டர் புராணத்துக்குப் பெரிய புராணம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. பெரிய புராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாற்றினைத் தொகுத்துக் கூறும் வரலாற்றுக் கருவூலம், சுந்தர மூர்த்தி நாயனாரைக் காவியத் தலைவராகக் கொண்டு இயல்வது பெரிய புராணம். பக்திச் சுவை மிளிரப் பாடப்பட்ட தனிப் பெரும் புராணம் இது.

திருத்தொண்டர் பெருமை, திருத்தொண்டின் மகிமை, வாழ்க்கைச் சுவை, பற்றற்ற துறவுமனம், வழிபாட்டு மரபு, இயற்கை வருணனை, நாடகப் பாங்கு, அன்பின் அற்புதம், ஆழம், அழகு, அருமை, பெருமை ஆகியவற்றை எடுத்துக் கூறும் அற்புத நூல் பெரிய புராணம்.

இறையின் புகழ், தனித்துவம், தூய தொண்டுக்கு கட்டுப்படும் நிலை என்பன பெரிய புராணத்திலே விஞ்சிக் காணப்படுகின்றன. நீண்ட நெடிய வரலாறுகள் பெரிய புராணத்திலே இடம் பெறுகின்றன. சேக்கிழாரின் நுண்மாண் நுழைபுலமும் மன விசாலமும் பக்தி அறநெறியும் கவிதை நயமும் நினைத்து இன்புற்று நுவலத்தக்கன. சேக்கிழார் தகவல்களைத் திரட்டிக் காவியமாக்கிய நுட்பம் இன்றும் வியப்பினைத் தருகிறது. அதாவது ஒருவர் என்னவிதமான மனோ நிலையில் நின்று கொண்டு புராணத்தைப் படிக்கின்றாரோ அந்த மனோ நிலையிலேயே கவியாகிய தாமும் கொண்டுள்ளமையைப் புலப்படுத்தும் உண்மை இலக்கியம் பெரிய புராணம்.

கட்டுக்கதை, உயர்வுநவிற்சி உண்மைக்குப் புறம்பு என்ற விமர்சனங்கள் பெரிய புராணத்துக்குப் பொருந்தாது. காரணம் அன்பும் சமய வாழ்வும் பொய்மையல்லவே! ஆதலால் சேக்கிழாரின் தூயவுள்ளம் - தொண்டுள்ளம் - வாழ்வாங்கு வாழ்ந்த மெய்யடியார்களைக் காட்டி, இன்றும் வாழ வேண்டிய நன்னெறியைப் பறைசாற்றும் பேரிலக்கியமாகத் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தை அருளியது.

வடமொழியாளர், புராணம் என்பது வம்சம், வம்சானுசரிதம் உட்பட்ட பஞ்சலக்ஷணங்களைக் கொண்டதென்று கூறுவர். பெரிய புராணத்தில் சேக்கிழார் அன்பு, அறம், கடமை, தூய்மை, சேவை, உண்மை, அருளின் வலிமை, விதியின் செயற்பாடுகள், அடியார்களது மனவுறுதி, வைராக்கியம் என்பன சேக்கிழாரது மனோநிலையினூடே புதிய வலிவும் வனப்பும் பெற்றுக் காணப்படுகின்றன.

பெரிய புராணம், 'சீலமே மேலான சக்தி' என்று வலியுறுத்துகின்றது இறைவன் 'சீலத்திருவானவன்' அடியவர் வாழ்விலே சீலம் என்ற சொல் பிரபல்யமாவது; முதன்மை பெறுகின்றது. பெரிய புராணம் சீலத்தால் உயர்ந்து வாழ்ந்த மெய்யடியார்களது பொய்ம்மையற்ற வாழ்வைச் சீரிய முறையில் எடுத்துக் கூறுகின்றது. சீலத்தை வாழ்விற் கடைப்பிடிப்பவர்களே சீலர்கள். இவர்கள் அறத்தையும் அன்பையும் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத திண்மை மறவர்கள்; உயர்ந்த வீரர்கள்; உத்தம சீலர்கள்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் காட்டும் அடியார்கள் மெய்ந்நெறியாளர்கள்! உத்தமர்கள். எதையும் சிவனுக்காக உவந்தளிக்கத் தக்க ஈரநெஞ்சினர். அருள்வளத்தை அனுபவிப்பவர்களுக்குத் துயரம் - துன்பம் தோன்றுவதில்லை; தெரிவதுமில்லை; அடியவர்களது பெருவீரத்தை, ஓர்மத்தை, துணிவை, திண்மையான வைராக்கிய பக்தியை, அருளைநாடி ஓடும் பாங்கை எப்படி எடுத்துக் கூறுவேன் என்று அவர்களை வியந்து பாராட்டும் பேருள்ளப் பாங்கு கொண்டவர் சேக்கிழார் சுவாமிகள்.

சேக்கிழார் 'அடியார்' என்ற வேடத்துக்கு அதீத மதிப்பும் கௌரவமும், அன்பும், பக்தியும் செய்து பணிந்து மகிழ்ந்து பாராட்டியவர். தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே என்பர். தொண்டுக்கு

## சேக்கிழாரின் கவி . . .

நிகர் எதுவுமில்லை. தொண்டர் தம் உயர்நெறி வாழ்வு இன்று மதிக்கப்படுவதில்லை. ஆனால் சேக்கிழாரது அன்புள்ளமும், அறிவுள்ளமும், ஆராய்ச்சியுள்ளமும் அடியவராகிய தொண்டர்களைப் பித்துப்பிடித்து அலைபவர்கள் போல சிவனை எண்ணியெண்ணி இரங்கி உருகும் விசரர்கள் என்றெண்ணாது உள்ளத்துச் செம்மை வாய்ந்த வீரர்கள் — உறுதிப்பாடுமிக்கார்கள் — என்று போற்றி வணங்கி அங்கீகாரமளித்து உண்மைக் காவலர்கள் என்று துதித்து திருவடி தொழுகின்றார். தொண்டர்குலம் தொழுகுலம் என்ற சிந்தனையின் தலைமை இலக்கியம் பெரிய புராணம்.

ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தை புதியபுதிய வளங்களையெல்லாம் கண்டு தனி மனித சமூக நடத்தைகளில் சீலத்தைத் தருவதற்கு வழிகாட்டும் பேரிலக்கியம் பெரிய புராணமாகும்.

நெறிமுறை சீலம் எப்போது மறந்து போகிறதோ அங்கே சேக்கிழார் என்ற கவிக்கோமான் நினைவுக்கு வருகின்றார். கைகொடுத்துதவுகின்றார்; கருத்துகளைத் தெரிவித்து எம்மையும் சமூகத்தையும் நெறிப்படுத்துகின்றார். அதனால் சேக்கிழார் ஒரு குறிப்பிட்டோரை மட்டும் வழிப்படுத்தாது எல்லோரையும் அழகுற நெறிப்படுத்துகின்றார். தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் வேண்டிய மரபுகளை ஒழுக்க சீலங்களை எல்லாம் செம்மையுடன் எழுதி வெளிப்படுத்தி இலக்கியஞ் செய்திருக்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

சேக்கிழார் தமது கவித்திறனூடு படைத்த உணர்வுநலன் என்றும் வேண்டிய அன்பும் அருளுமேயாகும். தொண்டர்கள் தமக்கெனவுள்ள எதனையும் பிறருக்குக் கொடுக்கும் இயல்பினர். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பெரிய புராண அடியார்களும் தலையை அறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமா நகருளானே' என்ற தத்துவத்துக்கு நற்சாட்சிகளேயாவர்.

சேக்கிழாரது கவித்துவவளம், கவித்துவநலன் 'மனித வாழ்வு' ஆசாரமுடன் இவ்வுலகிலே உள்ள மட்டும் போற்றிப் புகழப்படும்; பின்பற்றப்படும்.

தடுத்தாட்கொண்ட புராணம், கண்ணப்பநாயனார் புராணம், சிறுத்தொண்டர் புராணம், திருக்குறிப்புத்தொண்டர் புராணம், மெய்ப் பொருள் நாயனார் புராணம், இயற்பகைநாயனார் புராணம, அப்பூதியடிகள் புராணம், காரைக்காலம்மையார் புராணம் ஆகியவற்றினூடாக நாம் அரிய விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

ஒரு பேரிலக்கியம் என்றைக்கும் உண்மையான கொள்கைகளையும், நடைமுறைகளையும் கூறும் பொழுதுதான் அதன் யதார்த்தம் நம்பகமாக துலக்கம் பெறுகின்றது.

பெரிய புராணம் சைவசமய வழிபாட்டு நெறிமுறையை அழுத்திக் கூறும் பண்பாட்டுக் கருவூலம். இறைவழிபாடு புலனடக்கத்தோடு நடைபெற வேண்டியதொன்று என்பதையும், மனிதனிடத்துக் காணப்படும் ஐந்து பேரறிவுகளும் 'கண்'ணின் மூலமாக ஒருமுகமாக நோக்கி அடங்கி நின்று வழிபடும் ஆகம நெறியிலும் நடக்கும் இறைவழிபாட்டு மரபினைக் கூறும் சிறந்த இலக்கியம் பெரியபுராணமாகும்.

சேக்கிழார் பாடுகிறார்,

''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்று
திருந்துசாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையானாடும் ஆனந்த
எல்லையிற் தனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட்திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்''

என்பது அற்புதமான புராணமாகும். திருநெறிய தமிழிசையான திருமுறைகளோதும் போதும் ஈற்றில் பாடுவது பெரியபுராணமாகும். இது சைவ மரபு. இம் மரபுகளை நெறிப்படுத்தும் வகையில் அமைந்து என்றும் இறைவன் திருவடிப் போற்றின் நினைந்துருகுவதற்கு உறுதுணை புரிந்து இலக்கிய நயத்தின் தனிச் சிறப்புப் பெற்று விளங்கும் இலக்கியம் திருத்தொண்டர் புராணமாகும்.

''தொண்டர் தம் பெருமை போற்றி வாழ்வோமாக''

## ஐயப்ப தரிச . . .

(18ம் பக்கத் தொடர்ச்சி)

ஐங்காரச் சகோதரன், கலியுக வரதன், கருணாகரத் தேவன், சத்திய பரிபாலகர்.

சற்குணசீலன். சபரிமலை வாசன், வீர மணிகண்டன், விண்ணவர் தேவன்.

விஷ்ணு மோகினிபாலன், சாந்த சொருபன், சற்குணநாதன், நற்குணக் கொழுந்தன், உள்ளத்தமர்வான், ஐயப்பன்.

# அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் வருகை

— இரா. வைத்திமாநிதி —

மஞ்சள் வெய்யில் மாலையிலே, மஞ்சள் செவ்வந்தி மலர்த் தேரிலே, மங்கள வாத்தியங்கள் முழங்க, அடியார்கள் ''அரோகரா'' கோஷங்கள் ஆரோகரிக்க பஜனைக் கோஷங்கள் பண் இசைபாட, அறங்காவலர்கள், அமைச்சர்கள், அடியார்கள் புடைசூழ, இந்து மன்றங்கள், இயக்கங்கள், மாணவ மாணவிகள் இன்னும் பலர் முன் செல்ல, அறுபத்துநான்காவது நாயன்மாராகிய அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவலர்கள் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

வழி நெடுகிலும் இருமருங்கிலும் மக்கள் திரளாக நின்று பெரியவர் அருட்கடல் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை தரிசித்தனர், ஆசி வேண்டினர், ஆரோகரித்தனர், இந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மதுரை மாநகரிலே, சித்திரத் தேரினிலே எம்பெருமான் வீதிவலம் வந்தது போல் என்று இதிகாசங்களிலே படித்தவை நிகழ்வது போல் இருந்தது. மாபெரும் ஊர்வலம் மிகவும் அமைதியாக ஊர்ந்து சென்றதை எண்ணி எண்ணி மனம் மகிழ்ந்தது.

அருள்மொழி அரசு தனது தள்ளாத வயதிலே மிகவும் கம்பீரமான ஓசையோடும், பண்ணோடும் ஜனரஞ்சகமாக பத்து நாட்கள் அருள்மழை பொழிந்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சிவத் தமிழ்ச் செல்வியின் 68வது பிறந்த தினம்

— கே. கே. சுப்பிரமணியம் —



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி ஜே. பி. அவர்களின் 68ம் பிறந்த தின அறக்கொடை வைபவம் 07-1-1993 பிரசித்திபெற்றதெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்று எம்மக்களுக்குச் செய்துவரும் தொண்டு அளப்பரியது. யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பின் சைவத்துக்கும், தமிழுக்கும் அன்னார் செய்துவரும் தொண்டை சைவ உலகம் என்றும் போற்றிப் பாராட்டி வருகின்றது.

68 வயது அடைந்தும் மக்கள் சேவை மகேசன் சேவை என்ற கொள்கைக்கு ஏற்ற தொண்டு புரிந்துவருவதை சைவ உலகுக்கு நன்கு தெரியும். சிவத் தமிழ்ச் செல்வி அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாடி வதங்கும் மக்களுக்குச் செய்யும் சேவை அளப்பரியது. இவ்வருடம் தீபாவளிப் பண்டிகைக்கு 50,000 நலிவுற்ற பாதிக்கப்பட்ட நம் மக்களுக்கு வஸ்தா தானம் செய்துள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு உலக நாட்டில் பல பக்தர்கள் அளிக்கும் நன்கொடைகளை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள சங்கங்கள் அநாதை இல்லங்களுக்கும் அள்ளி அள்ளி வழங்கி வருகின்றார். துர்க்காதேவி ஆலயத்தில் அன்னார் அநாதைகளைப் பராமரித்து வருவதை பலர் பாராட்டி வருகின்றார்கள். நலிவுற்ற அந்தணப் பெரு மக்களுக்கும் கலைஞர்களுக்கும் பேராதரவு கொடுத்து வருகிறார். அநாதைப் பிள்ளைகளை இராமநாதன் கல்லூரியில் கல்வி பயில ஆவன செய்துள்ளார். சொல்ல முடியாத கால கட்டத்திலும் சலியாது தொண்டாற்றி வருவது நாம் செய்த பாக்கியம்.

அம்மையார் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் பல தொண்டுகள் புரியவேண்டும் என்று வாழ்த்துவோமாக.

## அருள்மொழி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். கேட்க கேட்க திகட்டாமல் இருந்தது. மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டியது. எங்கெங்கெல்லாம் நிகழ்ச்சிகள் நடைபெற்றனவோ அங்கங்கெல்லாம் மக்கள் பெரு வெள்ளமாக திரண்டு இருந்தார்கள். குழந்தைகளை உற்சாகப்படுத்தி பரிசுகள் வழங்கினார்கள். ''ஞானக் குழந்தைகள்'' என்று பாராட்டினார்கள்.

(1) அன்புப், ஆதரவும், அருளும்

(2) ஆசை வைக்காதே, அன்பு வை

(3) ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே

(4) ஆண்டவன் அருள் இருந்தால் அம்மியும் ஆழியில் மிதக்கும்

(5) தாயின் மகிமை

(6) தந்தை, மனைவி, கணவன், பிள்ளைகள்

என்று இன்னும் பலப் பல விஷயங்களுக்கு மிகவும் எளிமையான முறையில் நடைமுறை உதாரணங்களோடு எடுத்துக் கூறியது நெஞ்சம் நிறைந்து இருக்கின்றது.

இன்னும் எழுதலாம் எழுதிக்கொண்டே போகலாம் அந்த அளவுக்கு எம்மை தெய்வீக வழியில் மாசுபடாது வாழ்வதற்கு பல யதார்த்தமான வழிவகைகளை கூறி அறிவூட்டினார்கள்.

இப்பெரியவர் வாழும் நாட்களிலேயே நாமும் வாழ்வதற்கு என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை. இதை நினைத்து மனதில் மிகவும் பெருமையும் இறைபக்தியும் தளைக்கின்றது.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் உலகம் அறிந்த உலகம் அறிந்த, நல்லவர் யாவரும் அறிந்த நல்லவை யாவும் அறிந்த......அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு நாம் பார்த்து, தரிசித்து, அருள் ஆசி பெற்று, ஆன்மீக உரைகளை கேட்க வாய்ப்பு அளித்த ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய அறங்காவலப் பெரியவர் உயர்திரு V. T. V. தெய்வநாயகம் பிள்ளை அவர்களுக்கும் அவரது மற்றைய சகாக்களுக்கும் இந்து மன்றங்களும், அபிமானிகளும் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறோம்.

## இலண்டன் முருகன் ஆலயத்துக்கு புதிய மணவறை

இலண்டன் ஆர்ச்வேஹைகேற் முருகன் ஆலயம் மிகச் சிறப்புமிக்க ஆலயம். இப்பெருமைமிக்க ஆலயத்தில் பூசைகள், விழாக்கள் அனைத்தும் சிறப்பாகச் செய்துவருகிறார்கள். இப்பிரசித்திபெற்ற ஆலயத்துக்கு அறங்காவலர்களின் வேண்டுகோட்படி ஓர் சிறந்த மணவறை இலங்கையில் இருந்து திரு கே.கே. சுப்பிரமணியம் ஜே. பி. அண்மையில் அனுப்பிவைத்து இருந்தார். தைப்பொங்கல் அன்று வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் புதுமணவறையில் எழுந்து அருளி லண்டன் வாழ் சைவமக்களுக்கு அருள் காட்சி கொடுத்தார். அறங்காவல் சபைத் தலைவர் சைவப்பெரியார் திரு. விநாயகமூர்த்தி சிறந்த முறையில் மணவறையை அனுப்பிவைத்ததற்கு திரு. சுப்பிரமணியம் ஜே. பி.யை பாராட்டினார். திரு. சுப்பிரமணியம் ஆலயத்துக்கு வேண்டிய அபிடேகத் திரவியம் திருநீறு, குங்குமம், குத்து விளக்குகள், குடங்கள் முதலியனவும் இங்கு இருந்து அனுப்பி உள்ளார்.

ஆசிரியர்
'இந்து கலாசாரம்'
கொழும்பு

அன்பான ஐயா:

வணக்கம்

இந்து கலாசாரம், ஆடித் திங்கள் இதழ் கிடைத்தது மிக்க சந்தோஷம், நன்றி. பல கஷ்டங்களின் மத்தியில் பத்திரிகை வெளிவருகிறது அதனையிட்டு பெருமை கொள்கின்றோம்.

உலக சைவப் பேரவை - இலங்கை கிளை பற்றிய செய்தி மிகவும் மகிழ்ச்சியானது.

திரு. எஸ். தெய்வநாயகம் அவர்களின் இந்துமாமன்ற கட்டிடம் பற்றிய செய்தி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்துமாமன்ற கட்டிடத்தின் 'அவல நிலை' அனைத்து சைவ மக்களுக்கும் ஒரு மனத் தாக்கத்தை ஏற்படுத்தி உதவி செய்யவேண்டும்.

'அவனியில் பவனி'-ஒரு நல்லசெய்தி தொடர்ந்து வெளிவரவேண்டும்.

நன்றி

கன்னன்குடா — க. மாணிக்கவாசகர்

# வில்லிசை மூலம் அன்பு பரப்புவதே எனது பணி

கவிஞர் சுப்பு ஆறுமுகம்

தமிழகத்தில் இருபத்தெட்டு ஆண்டுகளாக வில்லிசை பாடிவரும் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினர் கொழும்பிலும், ஏனைய பல நகரங்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்தினர். இவர்களது நிகழ்ச்சிகளுக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. பழைமையான ஒரு கலையைப் பேணிப் பாதுகாத்துவரும் இக்கலைஞரிடம் 'இந்து கலாசாரம்' இதழுக்காகப் பெற்ற செவ்வி இங்கே தரப்படுகின்றது.

செவ்வி கண்டவர்:

— பண்டாரவளை அன்புச் செல்வன் —

கேள்வி: தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் உங்கள் வில்லுப்பாட்டு இடம்பெற்றுள்ளது. பாமர மக்களை வில்லிசை எந்தவகையில் ஈர்க்கிறது?

பதில்: தமிழகத்தின் கிராமங்கள் கலைகளுக்கு பெயர் பெற்றவை. நிறைய நாட்டுப் பாடல்கள் கூத்துகள் என்பன மக்கள் கலைகளாக வளர்ந்துள்ளன. இக்கலைகளில் மொழி, எளிமை என்ற பெயரில் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளதை கண்டு வருந்தினேன். எனவே வில்லிசையில் எளிய தமிழைக் கையாண்டு நல்ல சொற்களை அறிமுகம் செய்தேன். புதிய வார்த்தைகளைப் புகுத்தினேன். பின்னர் அவற்றினூடாக, இசையோடும் சத்தத்தோடும் நல்ல கருத்துகளைச் சொல்ல முடிந்தது. எனவே பாமர மக்கள் வில்லிசையை விரும்பி வரவேற்கிறார்கள். அவர்கள் சிந்தனையை இதகுவாக மாற்ற இந்தக் கலை பெரிதும் பயன்பட்டுள்ளது.

கேள்வி:- உங்கள் நிகழ்ச்சிகளில் மக்களை பெருமளவு கவர்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறமுடியுமா?

பதில்:- பல நிகழ்ச்சிகளைக் கூறலாம். குறிப்பாகக் கூறுவதானால், சென்னை வானொலி நிலையத்தினர் மகாத்மா காந்தி கதையை ஒரு வருடம் தொடர்ந்து சொல்ல ஒரு சந்தர்ப்பம் அளித்தார்கள். நல்ல மொழி வளத்தோடு சிறந்த கருத்தையும் இந்த நிகழ்ச்சியில் இசையுடன் கொடுத்தேன். தமிழகத்தில் மிகுந்த வரவேற்பு பெற்ற நிகழ்ச்சி. எனக்கும் நிறைவு தந்த நிகழ்ச்சி.

கேள்வி:- வில்லிசை தமிழகத்தில் மிகப் பழைய கலை. உங்களுக்கு முன் யாரேனும் புதிய உத்திகளைக் கையாண்டார்களா?

பதில்:- புதிய உத்திகளை வில்லிசையில் கையாண்ட முதல் ஆள் நான்தான் என்பது தமிழகம் அறிந்த



வலமிருந்து இடமாக நிற்பவர்கள் (1) இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களும் (2) வில்லிசை மன்னர் திரு. சுப்பு ஆறுமுகமும் அவர்களுமாவர். (3) திரு. சுப்பு ஆறுமுகம் அவர்களை செவ்வி கண்ட இந்து சமய கலாசார அமைச்சின் தகவல் துறை அதிகாரி திரு. ம. சண்முகநாதன் இடது கோடியில் காணப்படுகிறார்.

உண்மை நல்ல செய்தியைச் சொல்லவேண்டும்- மனதை உயர்வடையச் செய்கின்ற ஆன்மீகத்தை புகுத்தவேண்டும்-மனம் விட்டுச் சிரிக்கவைக்கவேண்டும் என ஒரு புரட்சியை நான் ஏற்படுத்தினேன் அதனால்தான் இந்த அளவு வளர முடிந்தது எனக் கூறலாம்.

## வில்லிசை மூலம்

கேள்வி:- பாரதிக்கும் வில்லுப்பாட்டுக்கும் ஏதேனும் தொடர்புண்டா?

பதில்:- பாரதி பாடல் பலவற்றில் வில்லிசையின் தாக்கம் உண்டு.

''ஆசை முகம் மறந்துபோச்சே. இதை யாரிடம்
சொல்வேனடி தோழி''

என்ற வரியில்வரும் போச்சே, தோழி போன்ற வார்த்தை வில்லிசையில் பயன்படுபவை.

கண்ணன் மனநிலையை - தங்கமே தங்கம்
கண்டுவர வேண்டுமடி - தங்கமே தங்கம்

என்ற வரிகளும் அப்படித்தான்.

இப்படி பாரதி பாடல்களில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் கூறலாம். பாரதி தனது இளம் வயதில் ஒருமுறை வில்லிசை நிகழ்ச்சி ஒன்றைக் காணச் சென்றிருந்தாராம். வில்லிசைத்தவர் தனக்கு தட்சணை வைக்காத விடயத்தை பாட்டாலேயே உணர்த்த பாரதி அதற்கு மறுமொழி கூறுவதுபோல

கடலை வச்சான் நதிய வச்சான்
காற்றையும் ஆற்றையும்
ஊற்றையும் எல்லாம்
சேத்து வச்சான்
இந்தியனுக்கு மூளைய மட்டும்
வைக்க மறந்தான்

எனப் பாடினாராம். இதுதான் பாரதி பாடிய முதல் பாடல். இது வில்லிசைச் சந்தத்தில் உள்ளது. பாரதி பின்னால் பாடிய காக்கை சிறகினிலே நந்தலாலா சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா, நெஞ்சிலே உரமுமின்றி, காயிலே புளிப்பதென்ன போன்ற பல பாடல்களையும் குறிப்பிடலாம். நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, கிளிப்பாட்டு போன்ற பாடல் வகைகள் வில்லிசை சந்தத்தில் உள்ளன.

கேள்வி:- வில்லிசையை பொறுத்தவரை உங்கள் இளமை அனுபவங்கள் எப்படிப்பட்டவை?

பதில்:- நான் வாழ்ந்த நெல்லை நிலமும் வில்லுக்கு பெயர் போனது. எப்போது பார்த்தாலும் ஆலயங்களில் வில்லிசை கேட்கும். நான் பாடசாலையில் கட்டுரை எழுதும்போது அதனைக்கூட இசையுடன் கலந்து எழுதி விடுவேன். வில்லிசை பற்றி நூல் எழுதி மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த எனது ஆசிரியர் ஆ. க. நவநீதகிருஷ்ணபிள்ளை எனது சந்தத்திற்காக நிறைய பாராட்டினார். அந்த வகையில், வாழ்ந்த நிலம், சூழல் என்பன எனது உணர்வுடன் இளமையிலேயே கலந்துவிட்டன. வில்லிசை, வாழ்க்கையாகி விட்டது.

கேள்வி:- உங்கள் வில்லிசையில் பல அனுபவங்களை பெற்றிருப்பீர்கள். குறிப்பிடத்தக்கவற்றை கூறுங்களேன்?

பதில்:- நிறைய - மிக நிறைய உள்ளன. நான் மனத் தூய்மையோடும் ஒரு பரிபூரண அர்ப்பணத்தோடும் இந்தக் கலையை ஆற்றுகிறேன். எனவே எந்தக் கூட்டமும் எனது உறவினர்கள்போல ஆகிவிடுகின்றனர். அந்தளவு அந்நியோன்யமாக பழகி கதை சொல்கிறபோது கேட்பவர் மனதை நெகிழவைக்க முடிகிறது.

இரண்டு உதாரணங்களைக் கூறலாம். சென்னையில் ஒரு தடவை வில்லிசை நடத்தினேன். வழமையாக தாயைப் போட்டு அடிக்கும் ஒருவன், எனது நிகழ்ச்சியைக் கேட்டபின் தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இன்னொருமுறை ஒரு கிராமத்தில் ஒரு மூதாட்டி, வில்லிசை கேட்டபின் கண்களில் கண்ணீர் ஓட தனது சேலையில் முடித்து வைத்திருந்த இரண்டு ரூபாவை எனக்கு தந்தாள். இவை மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

கேள்வி:- இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் நிகழ்ச்சி நடத்தி உள்ளீர்கள். அங்கு இந்த கலைக்கு வரவேற்பு எப்படி?

பதில்:- இந்தியாவின் பல பாகங்களைச் சேர்ந்தோர் வில்லிசை கேட்டுள்ளார்கள். அவர்களுக்கு மொழி புரியாவிட்டாலும் கலை புரிகிறது. பலரும் என்னிடம் பயில ஆர்வத்தோடு வந்துள்ளனர். உண்மை என்னவெனில்-இத்தகைய ஒரு கலை தமிழகம் தவிர்ந்த வேறெங்கும் இல்லை என்பதுதான் காரணம்.

கன்னடத்தில் யட்சகானம், ஆந்திராவில் புரக்தா போன்ற கலைகள் உள்ளன ஆயினும் வில்லிசை போல அவை இல்லை என அவர்கள் ஆதங்கப்படுவது உண்டு.

கேள்வி:- பழைய புராணக் கதைகள் இதிகாசம், போன்றவற்றை பாடிய வில்லிசைக்கும் உங்கள் வில்லிசைக்கும் ஏதேனும் தனித்துவம் உண்டு?

கேள்வி:- பழைய புராணக் கதைகள் இதிகாசம் போன்றவற்றை பாடிய வில்லிசைக்கும் உங்கள் வில்லிசைக்கும் ஏதேனும் தனித்துவம் உண்டா?

பதில்:- நிச்சயமாக மனம் விட்டுச் சிரிக்க வைப்பதன் மூலம் சமூக சிந்தனை என்பதுதான் எனது வில்லிசைத் தனித்துவம் பணக்காரனுக்கு அங்க வஸ்திரப் கொடுக்க ஆயிரம் பேர் இருப்பார்கள். ஆனால் ஏழைக்கு கோவணம் கொடுக்க ஒரு ஆள் தேவை. அந்த வேலையை நான் செய்கிறேன். இத்தக் கலையின் மகத்துவமே அன்றாட சமூகத் தேவைகளையும், பிரச்சினைகளையும் பற்றி கதை சொல்லும் கலைஞன் தன்னை ஆருதியாக்கிக்கொண்டு, கேட்பவருடன் உற

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

# வாசக நேயர்களுக்கு

அச்சுப் பதித்தலில் உள்ள சிரமங்கள் காரணமாக

"இந்து கலாசாரம்" இதழ்

இவ்வாண்டிலிருந்து விலை உயர்த்தப்பட்டுள்ளமையை

ஏற்கனவே எமது ஆசிரிய தலையங்கத்தில் அறிவித்துள்ளோம்

புதிய விலை விபரம் கீழே தரப்பட்டுள்ளது

சந்தாதாரர்கள் தமது சந்தாக்களை புதுப்பித்துக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். சந்தாவை புதுப்பிக்காதோருக்கு தொடர்ந்து இதழ்கள் அனுப்பப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | — | ரூ. 10/- |
| ஆண்டுச் சந்தா | — | ரூ. 130/- |
| ஆயுட் சந்தா | — | ரூ. 1000/- |

விபரங்களுக்கு: நிர்வாகி, இந்து கலாசாரம்

39/23, நெல்சன் லேன், கொழும்பு - 3.



திருகோணமலை - சிவயோக சமாஜ ஸ்தாபகர்

குருமணி ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா

அவர்கள் பற்றிய நூல்

## கருணைத் தெய்வம்
## கங்காதரானந்தா

தனிப் பிரதி ரூ. 25/-


தொடர்பு கொள்க: நிர்வாகி, இந்து கலாசாரம்

39/23, நெல்சன் லேன், கொழும்பு-3.

# மனவளக் கலை பயிற்றும்

## யோகிராஜ் வேதாத்திரி மஹரிஷி

— ம. சண்முகநாதன் —



இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அண்மையில் தமிழகம் சென்றிருந்தபோது யோகிராஜ் மஹரிஷி வேதாந்திரியை தரிசித்தார். அதன் சுருக்கத்தை இக்கட்டுரையில் காணலாம்.

எழுபத்தாறு வயதிலும் இளமைத் தோற்றம், தெளிந்த சிந்தனை, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மனிதர்கள் உடலையும் மனதையும் பயனுடன் வாழச் செய்ய பொதுத் தொண்டு உடல் நலமும் மன வளமும் பெருகினால் உலகம் அமைதியுடன் வாழும் என்ற உயர்ந்த நோக்கு இவற்றின் பிரதிபலிப்பாகத் திகழ்பவர் யோகிராஜ் வேதாத்திரி மஹாரிஷி அவர்களாவார்.

மஹரிஷி அவர்கள் ஆக்கிவைத்த உலக சமுதாய சேவா சங்கம் சென்னை திருவான்மியூரில் இயங்கி வருகின்றது. உடற் பயிற்சியும் மனப் பயிற்சியும் அளிக்கும் நிலையம் பொள்ளாச்சி, ஆழியார், அருட்பெருஞ் ஜோதி நகரில் இயங்கி வருகின்றது. இவை தவிர தமிழகத்தின் பிரதான நகரங்களில் உலக சேவா சங்கக் கிளைகள் உள்ளன.

யோகிராஜ் அவர்கள் 1911ம் ஆண்டு சென்னைக்கு அகிருவுள்ள கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் பிறந்தார். எளிய நெசவாளிக் குடும்பத்தைச் சார்ந்த அவர், கடவுள், உயிர், வறுமை, போன்ற விடயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். அத்துடன், ஆயுர்வேதம், சித்த மருத்துவம், ஹோமியோபதி ஆகிய மருத்துவங்களுடன் இயற்கை விதிகளை அனுசரித்து வாழ்வது எப்படி என்பதையும் பயிற்சி செய்தார். அவரது ஆராய்ச்சியின் விளைவாக மன அமைதிக்கான வழியைக் கண்டறிந்து 1958ம் ஆண்டில் உலக சமுதாய சேவா சங்கத்தை ஸ்தாபித்தார்.

தற்போது இச் சங்கத்தின் கிளைகள் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், கொரியா, மலேஷியா ஆகிய பல நாடுகளிலும் இயங்கி வருகின்றன.

இவரது கொள்கைகளும், விளக்கங்களும் மிகமிக எளிமையானவை. எனவே தமிழகத்தில் இவர் ''சாதாரண மனிதர்களின் தத்துவஞானி'' என அழைக்கப்படுகின்றார். பொள்ளாச்சியின் ஆழியாறு அணைக்கட்டிற்கருகில் அழகிய மலைச் சாரலில் அமைந்துள்ள சங்க ஆஸ்ரமத்தில் மன அமைதியும் உடல் நலமும் பெற விரும்புவோருக்கு இலவசமான பயிற்சிகள் அளித்து வருகிறார் மகாரிஷி அவர்கள். ஆரம்பத்தில் இரண்டு வாரப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### உடல் நலம்

மஹரிஷி அவர்களின் போதனைகளின் பிரதான அம்சம் உடல் நலம் ஆகும். உடல் நலமாக இருந்தால் மட்டும் மனம் ஆரோக்கியமானதாக இருக்கும். உடல் நோய் பெறுவதற்குரிய காரணங்கள் இயற்கைக்கு எதிரான நடைமுறைகளே எனக் கூறும் மகரிஷி அவர்கள் முறையும், நெறியுமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலம் நோயற்று வாழலாம் என தெளிவுபடுத்துகின்றார். கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக இவர் காட்டித் தந்துள்ள இலகுவான எளிய உடற்பயிற்சிகள் எவராலும் பின்பற்றத்தக்கவாறு அமைந்துள்ளன. இவற்றை முறையாக பயின்று வருவதன் மூலம், வாழ்க்கை மகிழ்ச்சியும் வெற்றியும்

## வில்லிசை மூலம் . . .

(24ம் பக்கத் தொடர்ச்சி)

வாடும்போது எத்தனையோ மனங்களைப் பண்படுத்திவிட முடியும். சிரிப்பால் பல காரியங்களை சாதித்துவிடலாம்.

கேள்வி:- நீங்கள் பயன்படுத்தும் நகைச்சுவை பற்றிக் கூறுங்களேன்?

பதில்:- யார் மனமும் நோகாமல் சிரிக்கவேண்டும். சிரிக்கவைக்கவேண்டும். பெர்னாட்ஷோ, காந்தி, பாரதி, கலைவாணர், பாரதிதாசன், காண்டேகர் போன்றோர் இந்த வகையான நகைச்சுவை மிக்கவர்கள். சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்ற நகைச்சுவையையே நான் பயன்படுத்துகின்றேன்.

கேள்வி:- ஓரிரு உதாரணங்கள்?

பதில்:- (1) உலகத்திலேயே பெரிய மிருகம் எது? யானை!

யானையை விட பெரிய மிருகம் எது?

யானையுடைய அம்மா?

எப்படி?

எல்லோரையும் விட அம்மா தானே பெரியவர்!

(2) இந்தக் காலத்தில் தூங்கும்போது கூட காலை ஆட்டிக்கொண்டுதான் தூங்கவேண்டும்

ஏன்?

இல்லாவிட்டால் இறந்துவிட்டதாக நினைத்து சுடுகாட்டுக்குக் கொண்டுபோய் விடுவார்கள். அந்தளவு இந்தக்கால மனிதர்கள் அவசரக்காரர்கள்.

கேள்வி:- நீங்கள் பழகிய பிரமுகர்கள் பற்றி சில வரிகள்?

பதில்:- கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மூலமாக பலருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர், பாரதிதாசன், ப. ஜீவானந்தம், கண்ணதாசன், திரையுலகில் பலர் என நிறையப் பேருடன் பழகக் கிடைத்தது. அறிஞர்களுடன் பழகுவது தவிர்ந்த இன்பம் ஏதும் இந்த உலகில் உண்டா?

கேள்வி:- உங்கள் நிகழ்ச்சிகளில் மிக உன்னதமானவை என நீங்கள் கருதுவது?

பதில்:- காஞ்சிப் பெரியவர் முன்னால் நான் நடத்திய நிகழ்ச்சிகள்தான் மிகவும் உன்னதமானவை. ஒரு தெய்வீக புருஷரிடம் எனது கலையை அர்ப்பணம் செய்யும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதனை வாழ்வில் கிடைத்ததற்கரிய பேறு எனக் கருதுகிறேன்.

(எளிமையும், அன்பும் உருவாகக்கொண்ட ஒரு கலைஞரிடம் பழகிய அன்போடு விடைபெற்றோம்)

## மனவளக கலை . . .

மிக்கதாக மாறும் என வலியுறுத்தி வருகிறார் மகரிஷி அவர்கள்.

### மன வளம்

மனமே, இன்பம், துன்பம், அமைதி, குழப்பம் அனைத்திற்கும் விளை நலம் மனதின் உயர்வே மனிதனின் உயர்வு. எனவே மனத்தை வளப்படுத்தினால் வாழ்க்கை வளம் மிக்கதாகும்.

எண்ணங்களை ஆராய்வதன் மூலம், அறிவு தெளிவு பெறும். நன்மை, தீமையை உணரும் ஆற்றல் பிறக்கும். இந்த ஆற்றல் வளரும்போது நமது வாழ்வின் போக்கையே நாம மாற்றி அமைக்கலாம்.

சில அடிப்படையான விடயங்களைப் புரிந்து கொண்டால், நமது வாழ்வை செப்பனிடுவது இலகுவானதாகும். சினத்தை தவிர்ப்பதால் வாழ்க்கையில இனிமையும் மகிழ்ச்சியும் ஓங்கும். முகம் பொலிவடையும். அனைவருடனும் அன்பு கொள்ளலாம்.

கவலையை ஒழிப்பதால் மன அமைதியும் உடல் நலமும் கிடைக்கும். ''வாழ்க வளமுடன்'' என நம்மையும், பிறரையும் வாழ்த்துவதால் நாமும் நலமாக வாழ்ந்து பிறரையும் வளமாக வாழச் செய்யலாம். இங்ஙனம், உடல் நலம், மன வளம் இவற்றைப் போற்றி இவற்றின் மூலம் ஆன்மீக விளக்கத்தை வளர்க்கும் மகரிஷி அவர்கள், இந்த நெறியின் மூலமே தனி மனிதனும் மனித குலமும் மேன்மையுற முடியும் என விளக்கி வருகிறார்.

இவரது ஆன்மீகப் பயிற்சிகள் ஐம்பது ஆண்டு கால ஆராய்ச்சியின் விளைவாகும். இவற்றை வயது, மொழி, மத பேதங்கள் இன்றி எவரும் பயிலலாம் என்பதே இப்பயிற்சிகளின் விசேடமாகும்.

அண்மையில் தமிழகத்திற்கு விஜயம் செய்த இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களைக் கண்டு அளவளாவியதோடு இலங்கையில் சங்கத்தின் ஒரு கிளையை அமைக்குமாறும் வேண்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும். முயற்சி செய்தால் முழுப் பயன் கிடைக்கும் — யாரோ

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# முழுமுதற் கடவுள்

திரு. பெரியதம்பிப்பிள்ளை தருமலிங்கம்

ஐந்தொழில்கள் எவை? அவற்றைப் புரிகின்ற கடப்பாடு ஏன் கடவுள் என்ற பொருளைச் சார்ந்ததாகின்றது? ஐந்தொழில்கள் படைத்தால், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். படைத்தல் என்பது ஆன்மாக்களைப் பொறுத்தவரை 'தோற்றுவித்தல்' எனப் பொருள்படும். அது பொருத்தமானதே. ஏனெனில் இறைவனின் அம்சமாகிய ஆன்மா மாயாகாரியமல்லாததால் அது படைக்கப்படுவதில்லை. பிரபஞ்சமும் படைக்கப்படுவதில்லை. ஆன்மாக்களின் பொருட்டு அது நிலைபெற்றிருப்பதால், அது சம்பந்தப்பட்ட வரையிலும் 'தோற்றுவித்தல்' என்பதே ஒக்கும். பிரபஞ்சத்திலே அவனுடைய அம்சங்களாகிய உயிர்த்தொகுதிகள் பலவுள. அவற்றை அநாதியாகவே மூலமலமாகிய ஆணவம் பற்றியுள்ளது. ஞானம், இச்சை, கிரியை என்கின்ற ஆன்ம சிற்சக்திகளை அணுத்தன்மையாக்கிக் கீழ் நிலைப்படுத்துவதால் அது ஆணவம் எனப் பெயர் பெற்றது. தனது அம்சமாகிய, தன்னால் தோற்றுவிக்கப்பட்ட ஆன்மத் தொகுதிகளை, மீண்டும் தன்னிடமே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் அருள் நோக்கினை இயல்பாகவே கொண்ட இறைவன். அவற்றை ஆணவற்றின் பிடியில் இருந்து விடுவிக்கச் செயல்புரிகின்றான். தனது கடமையை நடுநின்று செவ்வனே நிறைவேற்றுவதற்காகவே, செயலொழுங்கமைந்த பஞ்சகிருத்தியச் செயற்பாடுகளில் கண்ணுங் கருத்துமாக அவன் ஈடுபடுகின்றான். மாயாகாரியமாகிய உடம்பினுள் தன்னுடைய அம்சமாகிய உயிர் இருள் சூழ்ந்து மயங்கிக் கிடப்பதைக் கண்டு இறைவன் இரக்கமடைகின்றான். பஞ்சகிருத்தியத்தின் அடிப்படை இரக்கமேயாகும். எனவேதான் ஆன்மாக்களுக்கு மிகவும் அண்மித்த துணைவன் இறைவன் எனப்படுகின்றது. நம்மை ஈன்றெடுத்த கருவிகளாகிய அன்னையும் தந்தையும் கூட நமக்கு இறைவனைவிடத் தூரத்துத் துணையே என்பது உணரப்படல் வேண்டும்.

படைத்தல் என்பது ஆன்மாவின் கன்மங்கள் முதிர்ச்சி பெற்றவுடன், அவற்றின் பயனை நுகரச் செய்யும் பொருட்டு மாயையினின்று தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்தலாம். அழிகின்ற பொருள்கள் அல்லாது ஒடுக்கப்படுகின்ற பொருள்களே மீண்டுந் தோற்றுவிக்க படுதலால் படைத்தல் ''தோற்றுவித்தல்'' எனப்படுகின்றது. ஆன்மாக்களும் பிரபஞ்சமும் ஒடுக்கப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகின்றன. உடம்பு படைக்கப்படுகின்றது. அது அழிவுக்குரியது. காத்தல் எனப்படுவது ஆன்மா உரிய கன்மங்களை நுகர்ந்து முடியும் வரையும் தனு கரண புவன போகங்களை நிலைபெறச் செய்தலாம். அழித்தல் என்பது ஆன்மாவினைப் பயன்களை நுகர்தலால் உண்டாகும் இளைப்பினை நீக்குதற் பொருட்டுத் தனு கரண புவன போகங்களை மாயையில் ஒடுக்குதலாம். மறைத்தல் எனப்படுவது ஆணவ மலத்தின் வலிமையைத் தடுத்தலாம். பிறவாமை எய்தற்குரிய பக்குவத்தை அடையும் ஆன்மாக்களே ஆணவ மலத்தில் இருந்து முற்றாக விடுபடும். மூவகை ஆன்மாக்களுள் விஞ்ஞானராகிவரும் ஒரு மலத்தராகையால், பிறவாமை எய்தும் தகுதி முற்றாக ஆணவ வலி குன்றிய ஆன்மாக்களுக்கே உடைத்தாகும்.

பஞ்சகிருத்தியங்களை இன்னும் தெளிவாக விரித்து அறிந்துகொள்வது சாலச் சிறந்ததாகும். ஆன்மாக்கள் சிவமாயத் தன்மை எய்தல் வேண்டும். ஆணவ மல நீக்கம் இல்லாதவிடத்து அது சாத்தியமாதல் முயற்கொம்பாகும். எனவே சுகத்தைச் செய்பவராகிய இறைவன், ஆன்மாக்கள் மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தால் மேற்கொண்டுள்ள சேவை ஐந்தொழில் புரிதலாகும். தனது அம்சமாகிய உயிர்கள் மீண்டும் தன்னையே வந்தடைதல் வேண்டும் என்பதில் உடையான் எவ்வளவு அக்கறையுடையான் என்பதை நாம் காண்கின்றோம். இந்த அக்கறை இறைவன் தனது குழந்தைகளாகிய உயிர்கள் மீது கொண்டுள்ள அன்பாலானதாகும். அன்புள்ள இடத்திற்றான் அக்கறை உண்டு. எனவே இறைவன் தானாகவே ஆன்மாக்களுக்குச் செய்கின்ற பணி மிகு மெச்சுதலுக்கு உரியதாகும். உலகுக்கு முன்மாதிரியுமாகும். நன்னெறி இறைவனின் முன்மாதிரிகள் நாம் நெறிப்படுதற்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும். ஆன்மாக்களும் தங்களுடைய சொந்த இடத்துக்கு மீண்டும் செல்வதற்கு முயற்சிக்கின்ற தங்கள் கடமையில் அக்கறை கொள்ளுதல் வேண்டும். இந்தப் பூவுலகு ஆன்மாக்களின் சொந்த உலகு அல்ல. வாழ்க்கைச் சுழிப்பட்டு நாம் சுற்றுலாவில் இங்கு வந்துள்ளோம். மீண்டும் இறைவனை எய்துதலாகிய இறுதி இலட்சியத்தை உடையோம் என்பதை மனதிற்கொண்டு நாம் வினை புரிதல் வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# அவனியில் பவனி

நா. ஹரிதாஸ்

★ தெரணியகலை மாவட்டத்தில் எட்டு தமிழ் பாடசாலைகள் உள்ளன. ஆயினும் இங்குள்ள வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இதுவரை தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படாமை பாரபட்சமான ஒரு செயலே. தமிழ் மொழி அரசகரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தபோதும் கல்வி அமைச்சு தொடர்ந்தும் தமிழை புறக்கணித்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். அமைச்சும் அதிகாரிகளும் இவ்விடயத்தில் அக்கறை காட்டுமா?

★ தமிழரது பாரம்பரிய கலாசாரங்களில் ஒன்றான பரதநாட்டியத்திற்கு கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலே நாட்டிய அபிநயங்கள் முறையாக எழுதிப் பதிவு செய்யப்பட்டனவாம். மிக வேகமாக ஆடப்படும் நடனங்களுள் பரதநாட்டியமும் ஒன்றாகும். ஓரிரு நிமிடங்களுள் 36 விதமான நடன அசைவுகள் காட்டக்கூடியதாக இந்நடனம் வேகமாக ஆடப்படுகின்றதாம்.

★ இலங்கையின் பூர்வீகக் குடிகள் வேடுவர்களைத் தவிர வேறு எக்குடிகளும் அல்ல. இவர்களைத் தவிர இன்றைய அனைத்து மக்களும் வெவ்வேறு கால கட்டங்களில் இலங்கையில் வந்து குடியேறியவர்களே என்பதை வரலாறு கூறுகின்றது.

★ ஜப்பான் நாட்டு மொழியில் நானூறுக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன.

★ மொரட்டுவை நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 40 பேருக்கு போஹேலவத்தையில் 2 பேர்ச் வீதம் காணிகள் வழங்கப்பட்டு அதில் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன நீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகளுடன் இப்பகுதி பிள்ளைகளின் நலன்கருதி பாடசாலை ஒன்றும் இந்துக்கள் வழிபடுவதற்கு ஆலயம் ஒன்றும் அமைத்துக்கொடுக்கப்பட உள்ளது. பின்தங்கிய நிலையிலுள்ள இந்த தொழிலாளர்களுக்கு இந்த உயரிய கைங்கரியத்தை செய்ய முன்வந்திருக்கும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமிக்கு பாராட்டுக்கள். இது ஒரு முற்போக்கான செயலும் சமுதாய மேம்பாட்டிற்கு செய்யப்படும்சிறந்தசேவையுமாகும்.

★ ஒருமித்த மனத்துடன் தினமும் 20 நிமிடங்கள் தியானம்செய்து வருபவர்கள் என்றும் இளமையுடன் இருக்கமுடியும். தியானம் செய்யும்போது ஏதாவது ஒரு மந்திரத்தை உச்சரிக்கவேண்டும். வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவும் கூடாதாம். இளமையை பாதுகாக்க பணத்தை செலவுசெய்யாத ஒரு சிறந்த முயற்சி. அமெரிக்காவின் மருத்துவப் பத்திரிகையொன்று இந்த உண்மையை வெளியிட்டிருக்கின்றது.

★ வேப்பமரம் இந்துக்கள் மத்தியிலும்,சித்தவைத்தியத்துறையிலும் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. அந்தவகையில் வேப்பம் பூவிற்கு ''அல்சர்'' எனும் குடல் புண்ணை ஆற்றக்கூடிய ஆற்றல் உள்ளதாம். வேப்பம் பூவைக் காயவைத்து ஓர் இரும்புச் சட்டியில் போட்டு நெய்யிட்டு வதக்கி சூடான சாதத்தில் சிறிது நெய்யையும் ஊற்றி பிசைந்து சாப்பிட்டு வந்தால் அல்சர் மாறும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

★ தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள், தொடர்ந்தும் தோட்டப் பாடசாலைகளில் படிப்பிப்பது கௌரவக் குறைவு என்பதற்காக, நகர்ப்புற பாடசாலைகளில் நியமனம் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடிச்சென்ற வண்ணம் இருக்கின்றனராம். தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களின் கல்வியைப்பற்றி சிந்திக்காத இந்த ஆசிரியர்கள் சமுதாய மறுமலர்ச்சியைப் பற்றி சிந்திப்பார்களா?

★ மட்டக்களப்பு விபுலாநந்தா இசை நடனக் கல்லூரிக்கு இவ்வாண்டு கற்கைநெறிக்கு மாணவ மாணவியரை தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சையில் பாடத் திட்டத்திற்கு புறம்பாக பல வினாக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் மேலும், இந்தக் கல்லூரியில் பல முறையற்ற நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இக்கல்லூரியுடன் சம்பந்தப்பட்ட பலர் மிகுந்த விசனத்துடன் கருத்துத் தெரிவிக்கின்றனர். அப்படியாயின் இசைத்துறையில் எதிர்காலத்தில் வரட்சி ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது!

With Best Compliments

of

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS IN ALL KINDS OF

**ALUMINIUM WARES**

170 - 172, OLD MOOR STREET,

COLOMBO - 12.

Telephone: 435579

## திருக்கோணேஸ் . . .

(அட்டை உள்பக்கத் தொடர்ச்சி)

11ம் திகதி காலை 4 மணியில் இருந்தே கோணேசர் பூமியில் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. திருக்கோணேசர் திருகுடமுழுக்கைக் கண்டிட வேண்டும் என்ற ஆவலில், மக்கள் பல இடங்களிலிருந்தும் வருகை தந்ததை காணக் கூடியதாக இருந்தது.

சிவாசார்யர்களின் வேத ஒலி கடல் அலைகளைத் தாண்டி நகரையும், மெய்சிலிர்க்க வைத்தது. மக்கள் அரோகரா அரோகரா என இறைவனைக் கூப்பிட்ட குரல் கடல் அலைகளிலும் மலைகளிலும் மோதி எதிர் ஒலித்தன. எங்குதான் இருந்து இந்தச் சனக் கூட்டம் வந்தது என அங்கலாய்த்து மற்றவர் ஏங்கும் வண்ணம் கூட்டம் கூடிக்கொண்டேயிருந்ததே தவிரக் குறைந்தபாடில்லை கிரியைகள் ஆரம்பமான அன்று மழைபெய்ததுடன், ஐந்து பருந்துக்கள் வந்து வட்டமிட்டுச் சென்றது, ஒரு நன்மையான சகுனம் என சிவாசார்யர்கள் கூறி வைத்தனர். ஒவ்வொரு நாள் கிரியைகளின்போதும் இந்த பருந்துக்கள் வந்து மூலஸ்தானத்தின்மேல் வட்டமிட்டுச் சென்றதுடன் இலேசான மழைத் தூறலும் இடம்பெற்றது. மகா கும்பாபிஷேகம் 11ம் திகதி காலை 8 மணி 30 நிமிடத்திலிருந்து 9 மணி 20 நிமிடத்திற்குள் நடைபெறத் திருவருள் கிட்டியிருந்த வேளையில் நிற்க இடமில்லாத நிலை ஏற்பட்டது. அவ்வளவு மக்கள் கூட்டம் எல்லோர் மனதிலும் ஆனந்தவெள்ளம் கரைபுரண்டுஓடிக் கொண்டிருந்தது. பலர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்த வண்ணம் இறையருளை வேண்டி நின்றனர். மூன்று ஆண்டுகளாக கால்படாமல் இருந்த திருக்கோணேசநாதர் ஆலயச் சுற்றாடல் மக்கள் கூட்டத்தினால் அதிர்ந்தே போய்விட்டது எனலாம். காலை சரியாக 8 மணி 45 நிமிடமளவில் பிரதம சிவாசார்யார் சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் பூரண கும்பத்தை மூலஸ்தான கோணேசநாதருக்குதிருகுடமுழுக்காட்ட ஒரே நேரத்தில் இருபத்திரெண்டு சிவாசார்யர்களும் ஸ்ரீ மாதுமையம்பாள் உட்பட எல்லாத்தெய்வங்களுக்கும் திருகுடமுழுக்கு செய்த காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. மக்கள், மூன்றாண்டுகளாக இறைவனிடம் வேண்டி கேட்ட வரங்கள் அனைத்தும், கிடைத்து மகிழ்ந்த நிலையில், தங்களை இறையருளுடன் ஒப்புவித்த தன்மையில் மெய்மறந்து நின்றனர். கடல் அலைகள், அசையாமல், ஒரு நிமிடம் நின்றது போல், பக்தி கோஷம், வானைப் பிளந்து கடல் அலைகளை, ஓசைப்படாமல் தடுத்துவிட்டன தெய்வீக மணம் எங்கும் பரவி நின்றது. அதேநேரத்தில் மூலஸ்தானத்துக்கு மேல் வழமையாக வந்த ஐந்து பருந்துக்களும் வானத்தில் வட்டமிட்டுக்கொண்டு கும்பாபிஷேகம் முடியும்வரை இருத்த காட்சியைபலர் கண்டு மெய்மறந்து நின்றனர். சிவதரிசனம், இறையருள் கூடிய ஆலயங்களில் மட்டுமே, இத்தகைய காட்சி நடந்தேறும் எனப் பெருமைப் பட்டுக்கொண்டனர்.

திருக்கோணேசர், உடனுறை ஸ்ரீ மாதுமையம்பாள் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது, இறையருளின் மகிமையென்றே கூறவேண்டும். இது இலங்கை நாட்டிற்கு சுபீட்சத்தை ஏற்படுத்தும் செயல், சிவ பூமியில் சிவமணம் கமழும்போது அது எமது தொல்லைகளையும் துயர்களையும் விலக்கி இனிய வாழ்வுக்கு வழிகோலும் இறையருள் இருந்தாலும், அந்த இறையருளை வேண்டிநின்ற மக்கள் அனைவரும் தொடர்ந்து இவ்வாலயம் பூசை வழிபாடுகளுடன் திளைத்திருக்கவேண்டும். கோணேசர்நாதரின் திருவருள் இந்த இலங்கை நாட்டை ஆட்கொண்டு நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டு, குரோத நினைவுகள் மறந்தும் எங்கும் அமைதி தோன்றி சுபீட்சம் ஏற்படவேண்டும் என நாளாந்தம் கோணேசரை வேண்டி நிற்போம் அதுவே நாம் அவரிடம் கேட்கும் வரமாகவும் அமையவேண்டும்.

இவ்வாலயம் திறந்து மகா கும்பாபிஷேகம் காணும் வாய்ப்பை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாது நாளாந்த பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் ஆவன செய்த பெருமை இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சையே சாரும். இவ்வமைச்சின், சாதனைகளில் இதுவும் ஒன்று, சைவசமயத்தின் முழுமுதற் பொருளுக்கு இலங்கையின் இரு கண்களில் ஒன்று எனக் கருதப்படும் திருக்கோணேசருக்கு திருமுழுக்குகாட்டியதோடு நின்றுவிடாது அடுத்த கண்ணான திருக்கேதீஸ்வரர் ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்து திருமுழுக்காட்டினால் இரு கண்களும் திறந்து இலங்கைத் திருநாட்டிற்கு பெருமையூட்டிய சிறப்பு இவ்வமைச்சின் சிவத்திருப் பணிகளாக அமையும். கோணேசர் கும்பாபிஷேகம் இந்த நாட்டு இந்துக்களுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் மக்களுக்கக பெருமையைக் கொடுத்து நின்றது. இவ்வாலயத்தின் சிறப்பைக் கட்டிக்காப்பதுடன், ஆறுகாலப் பூசைகள் தவறாமல் நடந்து இறையருள்சூழ்ந்துநிற்கஅனைத்து இந்துக்களும் ஆவன செய்வோமாக,

உலகில் சாதி ஒன்றே உண்டு, அதுவே மனித ஜாதி: சமயம் ஒன்றே உண்டு, அதுவே தெய்வீக அன்பு. மொழி ஒன்றே உண்டு, அதுவே உள்ளத்தின் மொழி. தெய்வம் ஒன்றே உண்டு, அவரே எங்கும் நிறைந்துள்ளவர்.

— பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

### சமுதாய மறுமலர்ச்சியில் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் பணி

# இந்து ஆலயங்களுக்கெல்லாம் முன்னுதாரணம்

இயற்கையே ஓவியமாக கல்களைக் கவர்ந்திழுக்கும் எழிலகமாகத் திகழும் மலையகத்திற்கு மகுடமாக விளங்குவது மாத்தளை ஆகும். மாத்தளை என்றால் அதற்கு முத்திரை குத்தப்பட்டதாக விளங்குவது முத்துமாரியம்மன் ஆலயம்தான். இலங்கையில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றும், இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் அடியார்கள் அலை அலையாக திரண்டு செல்லும் ஆலயமுமாகத் திகழ்வது மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயமே.

எந்நேரமும் தெய்வீக மணம் கமழும் இவ்வாலயமும், ஆலயச் சுற்றாடலும் மனதிற்கு அமைதியையும், புத்துணர்வையும் ஊட்டுகின்றது.

ஆகம விதிப்படி இவ்வாலயத்தில் அனைத்துக் கிரியைகளும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் நடைபெறுகின்றன.

சமய விழிப்புணர்ச்சியை மாத்திரம் கருத்திற்கொள்ளாது சமுதாய மறுமலர்ச்சியில் ஏனைய ஆலயங்களைப்போல் அல்லாமல், இவ்வாலயம் புதிய கண்ணோட்டத்தில் சமுதாயத்திற்குசேவை செய்வது இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமானதே.

— நர். ஹரிதாஸ் —

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராகி திரு. த. மாரிமுத்து செட்டியார் அவர்கள் பதவியேற்றபின் இவ்வாலயமும், ஆலய சூழலும் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பது பாராட்டத்தக்கதே.

ஆலயத்திற்கு கிடைக்கும் வருமானம் சமுதாய மேம்பாட்டிற்காக செலவிடப்படுவதை சைவர்களாகிய ஒவ்வொருவரும், ஆலய பரிபாலன சபைகளும், தர்மகர்த்தாக்களும் அதனை முன்னுதாரணமாகக்கொண்டு செயல்படவேண்டும்.

இவ்வாலய சூழலில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை நடைபெறுகிறது. சுமார் 400 மாணவ மாணவியர்கள் சமய அறிவையும் நல்ல ஒழுக்க நெறிகளையும் பெற்று பயன் அடைகின்றார்கள். இலவச சத்துணவு இம் மாணவர்களுக்கு இவ் ஆலய தர்மகர்த்தா சபையால் வழங்கப்படுகிறது.

மேலும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இதே மண்டபத்தில் சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி நெறியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு தர்மகர்த்தா சபையே மாதாந்த வேதனங்களையும் வழங்கி வருகின்றது.

இலவசப் பாடப் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பல்கலைக்கழக புலமைப் பரிசில் ஆகியனவும் தர்மகர்த்தா சபையால் வழங்கப்பட்டுவருகிறது.

கடந்த 83ம் ஆண்டு வன்செயலின்போது இவ்வாலயத்தின் அழகிய சிற்பத் தேர்கள் அனைத்தும் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டன. அம்பாளின் அருட்கடாட்சத்தால் மீண்டும் சித்திரத் தேர் அமைக்கும் பணி ஆரம்பமாகி மிகக் குறுகிய காலமான ஐந்து மாத அவகாசத்திற்குள் முடிவடைந்துள்ளது. இது மாரியம்மனின் அருட்கடாட்சமே. 33 அடி உயரமான இந்த சித்திரத் தேர் அமைப்பதற்கு 27 இலட்சம் ரூபா தேவைப்பட்டபோதிலும், மாத்தளை வாழ் சைவ அன்பர்கள் 16 இலட்சம் ரூபாவை இந்த சித்திரத் தேர் அமைப்பதற்கு வாரி வழங்கியுள்ளார்கள். மாத்தளை வாழ் சைவ அன்பர்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை இது மேற்கோள் இட்டு காட்டுகிறது.

இலங்கையில் இந்து ஆலயங்களுக்குபஞ்சமில்லை. அதிலும் வருமானங்கள் குவியும் ஆலயங்களோ பற்பல. இவ்வாலய தர்மகர்த்தா சபைகளோ ஆலயங்களை விஸ்தரிப்பதிலும், இராஜகோபுரம் அமைப்பதிலும்தான் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனரே தவிர சமுதாயத்தைப்பற்றி சிறிதேனும் சிந்திப்பதற்கு தவறி விடுகின்றனர்.

இவ்வாலயங்கள் யாவும் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தையும் அதன் தர்மகர்த்தாசபைத் தலைவர் திரு. த. மாரிமுத்து செட்டியார் அவர்களையும் முன்னுதாரணமாகக்கொண்டு நடந்தால் எமது சைவ உலகத்தில் சிறந்ததொரு மறுமலர்ச்சி ஏற்பட்டு சுடர்விட்டு பிரகாசிக்கும் ஒரு உயர்ந்த இந்து சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

# விவேகானந்தன்

கொழும்பு விவேகானந்த சபையின் முத்திங்கள் வெளியீடான ''விவேகானந்தன்'' கிடைக்கப்பெற்றோம்.

மட்டக்களப்பு தமிழகத்தில் அரச மரியாதையும் சீர்வரிசைகளும் மானியங்களும் மரபு உரிமைகளும் சிறப்புடன் பெற்று விளங்கும் மண்டூர் ஸ்ரீ கந்தசாமி ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் விருச்சகம் மடாலயங்கள் ஆகிய சிறப்புக் கொண்டு விளங்கும் கண்குளிர காட்சி கொடுக்கும் திருமுருகனின் ஆலயத்தைப்பற்றிய சிறப்பு கட்டுரையை முன் பக்கத்தில் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது விவேகானந்த சபையின் செய்திகளும் அகில இலங்கை சைவ சமயப் பாடப் பரீட்சை •1990ம் அண்டு பரிசு பெற்றோர் விபரங்களும் வெளிவந்திருக்கிறது.

சமுதாய மறுமலர்ச்சிக்கு புத்துணர்வூட்டும்
"இந்து கலாசாரம்"
மென்மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# நந்தன் அச்சகம்

8, கொடுகொடல்ல வீதி,

கண்டி.

Registered as a 'Newspaper at the G. P. O - No. QD/24/News/92

*Best Compliments*

*of*

RIKEN TIRE

# Jailaxmi Stores

HEAD OFFICE

**91-A Maliban Street, Colombo 11**
**Telephone: 26149, 541329.**
**Cable : " JAYEXPORT "**
**Telex 22744 JLS CE.**
**Fax 587240.**

BRANCH

**153, Union Place.**
**Colombo 2.**
**TEL 548547, 547741**

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி, என்பவரால், கொழும்பு-13 98-B ரட்ணம் வீதி, ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.